## 206-2027 கல்வியாண்டு

## முதலாம் பருவம்

## தமிழ்த்தாய் வாழ்த்து!

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

சிந்தா மணிச்சுடரே! செங்கைச் செறிவளையே!
தந்த வடமொழிக்கும் தாயாகி நின்றவளே!
சிந்து மணற்பரப்பில் சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர் மூத்த சுமேரியத்தார்
செந்திரு நாவில் சிரித்த இளங்கன்னி!
சிந்துங் கலைவடிவே! சீர்த்த கடற்கோளில்
நந்தாக் கதிரொளியே! நாடகத்துப் பண்ணியலே!
வந்த குடிமரபோர் வாழ்த்தி வணங்குவமே!

## 2. நாட்டு வணக்கம்

- பாரதியார்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ? - இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து, அருள்
ஈந்ததும் இந்நாடே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே – அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே - தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே - இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 2

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே - அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே - மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே - பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே - இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

**நூலைப்படி**

**பாரதிதாசன்**

நூலைப்படி -- முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு :

காலையிற்படி கடும்பகல்படி
மாலை, இரவு பொருள்படும் படி
நூலைப்படி

அடிகள் :

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி? நூலைப்படி!

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்ததமிழ்நான் மறை
பிறந்ததென்று சொல்லும்படி நூலைப்படி!

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி
புகப் புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என்சொற்படி நூலைப்படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமேமறுபடி நூலைப்படி

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ளநூற்களை ஒப்புவதெப்படி நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்காஇன் பம்மறுபடி
ஆகும்என்ற ஆன்றோர் சொற்படி நூலைப்படி!

## புத்தரும் சிறுவனும்

- கவிமணி

*சிறுவன் வழியில் மயங்கிக் கிடந்த புத்தரைக் காணுதல்*

ஆடுகள் மேய்த்துவரும் - ஒருவன்
ஆயர் குலச் சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச் - செல்லும்
வழியின் மீதுகண்டான்.

அவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே - பிறந்த
மாதவச் செல்வன் முகம்
வெய்யிலில் வெந்திடாமல் - தழைகள்
வெட்டி அருகில் நட்டான்.

தெய்வ குலத்திவனை - எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே- சிறிது
சிந்தை தயங்கி நின்றான்.

உள்ளந் தெளிந்துடனே - வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து.
வள்ளல் மயக்கொழிய - மடுவை
வாயில் கறந்துவிட்டான்.

நட்ட தழைகளெல்லாம் - வளர்ந்து
நாற்புறமும் கவிந்து,
கட்டிய மாளிகைபோல் - வனத்தில்

காட்சி யளித்த, அம்மா!

ஐயனை இவ்வுலகம் - காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்

கைகள் தொழுதுநின்றான் - சிறுவன்

களங்க மிலாவுளத்தான்.

புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்த ஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கி,

கலத்தினி லேகொஞ்சம்-பாலைக்

கறந்து தருவாய்' என்றான்.

சிறுவன் மறுத்தல்

“ஐயையோ! ஆகாது” என்றான் - சிறுவன்

“அண்ணலே! யானும் உனைக்

கையினால் தீண்டவொண்ணா - இடையன் ஓர்

காட்டு மனிதன்“ என்றான்.

புத்தர் அறிவுறுத்தல்

“இடர் வரும் போதும் - உள்ளம்

இரங்கிடும் போதும்

உடன் பிறந்தவர்போல் - மாந்தர்

உறவு கொள்வர், அப்பா!

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,

தேடிப்பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா?

எவர் உடம்பினிலும் - சிவப்பே

இரத்த நிறமப்பா!

எவர் விழிநீர்க்கும் - உவர்ப்பே

இயற்கைக் குணமப்பா!

நெற்றியில் நீறும் - மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றுஇவ் உலகுதனில் - எவரும்
பிறந்த துண்டோஅப்பா!
பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டு மெனில் - நல்ல
செய்கை வேண்டும். அப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே -அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.”
சிறுவன் பால் தருதல்
நிலத்துயர் ஞானி-இவை
நிகழ்த்தி, ”என் தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம்-பாலைக்
கறந்து தா” என்றான்.
ஆயர் சிறுவனும் - கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன் - கொண்ட
தளர்ச்சி நீங்கினனே.

**விடுதலை**

**பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம்**

உள்ளும் புறமாகி
ஒளியாகி -ஞான
வெளியாகி நின்ற உமையே!

**துள்ளும் கலைகளாகித்**

**துளியாகிக் கடலாகித்**

**தெளிவாகி நின்ற திருவே!**

**அல்லும் பகலுமாகி**

**அறமாகித் தரமாகி**

**வளமாகி வந்த வடிவே!**

**அனுதினமும் உனது மலரடி**

**இணையில் இணையுமெனை**

**ஆண்டருள்வாய் அம்மையே...!**

**கையிலே சூலமும்**

**கண்ணிலே கருணையும்**

**கனிவாயில் அன்பு நகையும்**

**கொய்யாத மலர்முகமும்**

**குலுங்கு நவமணி**

**அழகுங் கொண்ட தாயே!**

**மை போன்ற இருட்டிலே**

**வையகமும் மாந்தரும்**

**மயங்கும் வேளை**

**மெய்யிலே அறிவெனும்**

**விளக்கேற்றி வைத்து**

**நீ விடுதலை வழங்குவாயே..!**

# நெய்வேலி நாம் பெற்ற பேறு

-தமிழ்ஒளி

**அரிய நிலக்கரியே! ஆசையே! முன்னாட்**
**பெரிய மரங்கள் பெயர்ந்துவீழ்ந் ட்புதைய**
**மண்ணுள், அதன்வயிற்றுள் மாயமாய்த் ன்றியநீ -**
**எண்ணுள், அடங்கா இடங்கொண்டு கண் துயின்று**
**பன்னாள் உறைந்து படிவங்கள் ஆயினாய்!**
**முன்னாள் அறிய முதல்தந்தாய் இன்றைக்கே!**
**மண்ணுள் மறைந்த மனிதன் அலாவுதீன்,**
**கண்ணுள் ஒளிகாட்டிக் கையில் விளக்கேற்றி,**
**நெய்வேலி மண்ணில் நிலக்கரியாய் நிற்கின்றான்!**
**மைவான் முகில்போன்றும் மாயப் பசுபோன்றும்**
**கற்பகம் போன்றும் கருதியவை நல்கவே**
**முற்பட்டான்! பாரீ ர்! முகிழ்க்கும் நிலக்கரியாய்!**
**மூங்கிற் பெருங்காடு முன்னங் குழல்தந்து,**
**வீங்கி வளர்ந்து, விழுந்து, விறகாகி**
**அழுந்தி அடிமண்ணுள் அங்கே கிடந்து**
**பழுப்பு நிலக்கரியாய்ப் பாய்ந்தெழுந்த விந்தைதனைத்**
**தென்னாடு கண்டு சிலிர்ப்பெய்த ஆம், இன்று**
**பொன்னான நேரம், புதுநாள் பிறந்துளது!**
**பச்சைப் பயிர் விளையப் பக்குவம் ஆனஉரம்**
**இச்சைப் போல்எங்கும் இயற்றுவதும், மின் விசையை**
**ஆக்கி எமக்கே அளிப்பதும், பேரிருள்**
**போக்கி ஒளியைப் பொழிவதும் செய்யவல்லாய்!**
**ஊர்திகளும் கப்பலும், உற்பத்தி ஆலைகளும்,**
**பேர்பெற் றியங்கப் பெரிதும் பயன் நல்கும்**
**எங்கள் நிலக்கரியே! ஏழை மடிதவழ்ந்த**
**தங்கக் குழந்தாய்! தமிழ்நாட்டுத் தாய்வளமே!**

**பொன்னால் மணியால் புகழ்முத்தால் என்ன பயன்?**
**உன்னால் புகழ்பெற்றோம்! ஓ, ஓ! உலகிடையே!**

## எதனாலே ?

**உடுமலை நாராயணகவி**

**அன்பே கடவுள் என்ப தெதனாலே ? - அதில்**
**ஆன்ம சக்தி இன்பம் இருப்பதாலே!**

**சாத்திரங்கள் பொய்யென்ப தெதனாலே? –**
**ஏமாத்துகிற வார்த்தையு மிருப்பதாலே!**

**சாதிமதம் இல்லையென்ப தெதனாலே ? – மனம்**
**சமத்துவம் தானடைந்த தன்மையாலே!**

**பொதுவுடைமை கேட்ப தெதனாலே? –**
**தொழில் புரிந்தும் புசிப்பற்றுப் போனதாலே!**

**நன்மையெல்லாம் தீமையான தெதனாலே?**
**ஞானமற்ற பேச்சு நடத்தையாலே!**

**தன்மதிப்புக் குறைவது மெதனாலே?**
**தரங்கெட்ட சகவாச தோஷ த்தாலே!**

**உண்மையை மறைப்பதுவு மெதனாலே?**
**உள்ளும் புறம்பும் வேறுபட்டதாலே!**

**எண்எழுத்தைக் கண்ணென்ப தெதனாலே?**
**உண்மைபொய்யை உள்ளமது காண்பதாலே!**

# இணைய ஆற்றுப்படை

## இணையத்தால் விளையும் பயன்கள்

மு. இளங்கோவன்

புலனம் என்னும் பொருந்து செயலியைக்
கைபேசியில் இணைத்த பொழுதில்
காசு செலவின்றிக் கண்டம் கடந்தும்
ஒலிஒளி உதவியால் பேசி மகிழலாம்.
குழுவினர் பேசும் கோலமும் உண்டு.
படங்களை, காட்சியை, பேச்சு, உரைகளை,
நொடியில் அனுப்ப, புலனம் உதவும்.
பணம் செயலியை இணைத்துக் கொண்டால்
காசு பணத்துக்கு வைப்பகம் வேண்டாம்.
மின்வரி, நீர்வரி, தொலைபேசிக் கட்டணம்,
மருந்து வேண்டவும், மாத்திரை வாங்கவும்,
காட்சி ஊடகத்துக்குக் காசு கட்டவும்,
திரைப்படப் பதிவுக்கும், தின்பண்டம் வாங்கவும்,
நுரைப்பால் அருந்தவும், நுங்கு வாங்கவும்,
இல்லாள் விழைந்த மல்லிகை வாங்கவும்,
செயலிகள் உதவுதல் சிறந்த உதவியே!
நல்ல செயலிபோல் தீமைச் செயலியும்
உலவுதல் அறிவீர். ஒருநொடிப் பொழுதில்
வங்கிப் பணத்தை வழித்தெடுக்கவும்
இழிமைக் காட்சியை இருவிழி காணவும்
பற்பல செயலிகள் பாரினில் உண்டாம்.
இணையக் குற்றத்தை எளிதில் தடுக்க
ஒவ்வொரு நாடும் உரிய சட்டத்தைத்
தனித்துடன் இயற்றித் தனிப்பிரி வமைத்தனர்.
நமக்கு வேண்டிய நலமுறு தரவினைத்
தேடிப் பெற்றிட தேடுபொறி உதவும் ;
வைய விரிவு வலையினில் தேட
கூகுள், பயர்பாக்சு, மைக்ரோசாப்டு எனத்

தேடு பொறிகள் பற்பல இருப்பினும்
என்னருந் தமிழர் இணையத் துறையை
உலக அளவில் உறுவழி நடத்தினும்
தாய்மொழி தன்னால் தேடுதல் செய்ய
பொறியொன் றாக்க முனைந்தனர் இல்லை.
சீனாக் காரன் "பைடு எனும் பெயரில்
தாய்மொழிப் பற்றால் தந்து மகிழ்ந்தனன்.

## ஒப்பிலாத சமுதாயம்

-அப்துல் ரகுமான்

தனித்திருந்தவன்

பசித்திருந்தவன்

விழித்திருந்து கண்ட கனா!

இவ்வுலகில் வாய்க்காது

என்று சில சமயங்கள்

அவ்வுலகில் கற்பித்து

அமைந்திருக்கும் கற்பனை.

பொருளியல் அறிஞர்கள்

புத்தகத்தில் காட்டும

பூலோக சொர்க்கம்

அரசியல்வாதிகளின்

அலுக்காத வாக்குறுதி.

திட்ட ஆண்டிகள்

கட்ட முயலும் மடம்

பாட்டுப் புலவர்க்கோ

நாட்டு நகர்ப்படலம

வறுமையெனும் பாலையிலே

வாடுகின்ற மான்களுக்கோ

கண்களை ஏமாற்றும்

கானல் நீர்.

எப்படிக் கூடுவது

என்பதிலே பேதங்கள்

எப்படி வாழ்வது

என்பதிலே குத்துவெட்டு

பயணத்தில் சம்மதம்

பாதையிலே தகராறு

ஒரு சிலர்க்கோ இது

ஆண்டவன தர வேண்டும

;ஒரு சிலர்க்கோ இது

ஆயுதத்தால் வரவேண்டும்.

சமையலறைதான் வீடு

இது சிலரின் வேதம்

படுக்கையறைதான் வீடு

இது சிலரின் வாதம்

நல்லதொரு சமுதாயம்

நாம் காண வேண்டும ;

அதற்காக

**எட்டமுடியாத**

**இலட்சியங்கள் தேவையில்லை.**

**அடைய முடியாத**

**ஆகாயக் கோட்டை ஏன்?**

**எட்ட முடிகின்ற**

**யதார்த்தக் குடில் போதும்.**

**அந்தச் சமுதாயத்தில்**

**ஆறாக வீதியிலே**

**பாலும் தெளிதேனும்**

**பாய்ந்தோட வேண்டாம்**

**இரத்தம் ஓடாது**

**இருந்தால் அது போதும்.**

**அங்கே –**

**எழுத்துக்குத் தடையிருக்கும்**

**இழிந்த தலை எழுத்துக்கு.**

**பேச்சுக்குத் தடையிருக்கும்**

**பெருந்திண்ணைப் பேச்சுக்கு.**

**பத்திரிகைத் தணிக்கையுண்டு**

**பச்சைக்கும் மஞ்சளுக்கும்.**

**பொதுக்கூட்டத் தடையுண்டு**

பருவஆண் பெண்ணுக்கு

கண்டகண்ட இடத்தில்
கட்சிக்கொடியேற்றக்
கட்டாயம ; தடையுண்டு!
உடைக்குப் பயன்படாது
ஊதாரித் தனமாகத்
துணிச் செலவு ஆவதனால்!

அங்கே

பதுக்கலுக்கு நிச்சயம
பாராட்டுக் கிடைக்கும்
பாட்டில் நயங்களைப்
பதுக்கி வைப்பதற்கு!
கள்ளக் கடத்தலுண்டு
காதற்கண் நடத்துகின்ற
உள்ளக் கடத்தலது.

கலப்படம் செய்பவர்க்குக்
கைநிறையப் பரிசுண்டு
கல்யாணத்தால் சாதிக்
கலப்படத்தைச் செய்பவர்க்கு!

கறுப்புப் பணத்திற்குக்
கவுரவம் உண்டங்கே

**உழைப்பவர் அழுக்குக்**

**கைகளிலே புரள்வதனால்!**

**சாதிகள் இருக்குமங்கே**

**சரித்திரத்தின் ஏடுகளில்**

**போர்ப்படைகள் இருக்கும்!**

**பொருட்காட்சிச் சாலைகளில்!**

**சமுதாய ஒழுங்குக்குச்**

**சட்டங்கள் இருக்குமங்கே**

**இடியாக அல்ல இனிய மழையாக!**

**நீதிமன்றம் இருக்குமங்கே**

**நீதியை விற்கும்**

**சந்தையாக அல்ல**

**சத்தியத்தின் நிழலாக!**

**அங்கே**

**விசாரிக்கப் படுவன**

**குற்றங்களல்ல**

**குற்றத்தின் காரணங்கள்.**

**கைவிலங்கு மட்டுமல்ல**

**கையுறையும் அங்கிருக்கும்**

**நல்லவை செய்வோரை**

நாடிக் கொடுப்பதற்கு

சிறைகளும் அங்குண்டு

செல்லும் புழுக்களை

வண்ணத்துப் பூச்சியாய்

மாற்றி அனுப்புதற்கு!

அங்கே

காவலர்

கைகளிலே தீவட்டி இருக்காது

தீபங்கள் இருக்கும்

அங்கே

கட்சிநாயகம்

அல்ல ஜனநாயகம் நடக்கும்

அங்கே

வாக்குப் பெட்டிகளைச்

செயற்கை முறையால்

சினையாக்க முடியாது

கருச்சிதைவு செய்யும்

காரியமும் நடக்காது

அதன் வயிற்றிற்கு

அவதாரம் சூல்கொள்ளும்

ஆற்றலிருப் பதுபோன்றே

ஆணவ அசுரர்களை

அள்ளி விழுங்குகின்ற

ஆவேசமும் இருக்கும் !

வாக்குகள் எண்ணப்படமாட்டா

எடைபோடப்படும ;

அங்கே!

குடியானவன் வீட்டுக்

கோழி முட்டையை

அதிகாரி வீட்டு

அம்மி அடைக்காக்கும்!

அங்கே –

இதயத்தை ஏமாற்றி

இரக்கத்தைக் கறப்பதற்கு

வைக்கோல் கன்றுகள்

வைப்பவர்க்குச் சிறை உண்டு

இலட்சிய வீடு

எதுவென்றால்இமக்கிய

முதுமக்கட் தாழிகளை

முன்கொணர்ந்து வைக்கின்ற

பத்தாம் பசலி;

பண்டிதர்க்கங் கிடமில்லை

வாய்க்கோயில் பசியால்

வனப்பிழந்து கிடக்கஇ

அங்கே வசிக்கின்ற

மொழிக்கு வழிபாடு நடக்காது

ஆசிரியர்இ சுரைக்காயின்

சித்திரத்தை யல்ல

வித்தை வழங்குவார்

இறுதியிலே

பட்டம் அளிக்கும்

பயன்படா விழா அல்ல

வேலை அளிக்கும்

விழா நடக்கும்

அங்கே

திருமணங்கள் சொர்க்கத்தில

நிச்சியிக்கப் படமாட்டா

திருமணங்கள் சொர்க்கத்தை

நிச்சயிக்கும்

அங்கே

மணம் என்றால் பணம கேட்கும

ஆண்விப சாரத்தை

பிரம்மச் சரியத்தால்

தண்டிக்கும் நீதியுண்டு!

தாலிக் கயிறு ஒரு

ஆயுள் தண்டனையின்

கழுத்து விலங்காகாது!

திரவப் பெண்மைக்குத்

திடப்பொருள் கிண்ணமாய்

ஆண்மை இருக்குமங்கே!

ஆண்மையுடன் போட்டியிடும்

ஆவேசத்தில் அங்கே

மெல்லிய பெண்மை

மீசை வளர்க்காது

பெருமைக் குரிய பெண்மைஅங்குப்

போற்றப் படுமன்றிப்

பூஜிக்கப் படாது!

அங்கே

பிரமனுக்குக் கட்டாய

ஓய்வுதரப் படாது!

ஆனால்

வேண்டிய அளவுக்கு

விடுமுறைகள் தரப்படும்

அங்கே

சமயங்களெல்லாம்

தைக்கின்ற நூலாகும்

கத்தரிக் கோல்களின்

காரியத்தைச் செய்யா

பக்குவ வேதப்

பக்கங்களிலிருந்து

மதவாதிகள் அல்லர்

மனிதர்கள் மலர்வார்கள்

பணமகளுக் கங்கே

பதிவிரதைத் தன்மை

பாவமென ஆகும்

பரத்தமையே அவளுக்குப்

பாராட்டும் கற்பாகும்

.பதிவுத் திருமணம்

பண்ணிவிட்டதாலேயே

பூமிப் பெண்ணுக் கொருவன்

புருஷனாக முடியாது.

வியர்வைத் துளிகளைப்
பரிசமாய்த் தருவோர்க்கே
மண் மகள் மனையாவாள்

அனைவரும் ஓர்நிறை
அல்ல
உழைக்கும் சாதியே
உயர்ந்த சாதி
அங்கே
வயிறு மட்டுமல்ல
மனமும் நிறைந்திருக்கும்

சுதந்திரம் அங்கே
சுவாசமாய் இருக்கும்
பிறர்தர வாங்கும் பிச்சையாய் இராது

கடமை அங்கே கவுரவம்
உரிமை அங்கே ஊதியம்
சத்தியம் அங்கே சமயம்
இதயம் அங்கே முகவரி
புன்னகை அங்கே பொதுமொழி .

நகைத் துளிப்பா, இயைபுத் துளிப்பா

ஈரோடு தமிழன்பன்

நகைத் துளிப்பா ( சென்ரியூ)

நீதிபதி சொன்னபடி நின்றது

நீதி சொன்னபடி

நிற்காத தராசுமுள்.

இரண்டு வருடங்களாய்

நோயால் முடியாதது

மருத்துவத்தால் ஒரே நாளில்.

அமைதி வெடித்துப்

புத்தர்சிலை

தூள் தூள்.

கிளித்தோப்பில்

கட்சிக் கூட்டம்

பேசுவதை நிறுத்திவிட்டன கிளிகள்.

ஒலிபெருக்கிச்

சோதனைமுடிந்ததும்

பேச்சாளர் சோதனை

பிரிந்த உயிரின் வேதனை

இதுவரை

பிணத்திலா வாழ்ந்தேன்?

**பூனைக்கு ஞானம் வந்தது**

**எனினும் கொண்டாட முடியவில்லை**

**எலிகளால்.**

**இறுக மூடிக்கொண்டன**

**பாடநூல்கள்**

**மாணவாபிமானம்.**

**கதை வேண்டாம்**

**கதவைத் திறந்துவிடு**

**குழந்தை அடம்.**

**வருமானம் இல்லை**

**ஊர்சுற்றும்**

**குடைராட்டினக்காரன்**

**இயைபுத் துளிப்பா ( லிமரைக்கூ)**

**பறவை யோடு சேர்ந்து பற**

**சிறகுகள் தேவை இல்லை மனிதன்**

**என்பதை மட்டும் நீமற**

**பாடுவது அருட்பாப் பதிகம்**

**அன்றாடம் உணவில் ஆடு கோழி**

**மீன்நண்டு வகையே அதிகம்**

**எதற்கப்பா எதுகை மோனை**

**மின்னலைப் பிடித்து**

**வைக்கவா சட்டி பானை?**

**வடிந்து விட்டது வெள்ளம்**

**மணலுக் குள்ளே கொதித்துக் குமைந்து**

**வருந்துமா ஆற்றின் உள்ளம்?**

**கழுத்துப் புண்ணு நோவு**

**நுகத்தடியில் எதுக்கு வேணும் எனக்குக்**

**கோத்துக் கட்டின பூவு?**

**பறவை ஒன்று இறந்தது**

**பறந்து பறந்து பறவை தொட்ட**

**உயரங்கள் கண்ணீர் சுரந்தது**

**சென்னிமலை வெங்கச் சங்கல்**

**உறங்கும் போதும் கண்ணில் தளும்பும்**

**யுகம்க டந்த வெளிச்சங்கள்**

**அலுத்துப் போனது காட்டில்**

**மானும் முயலும் வாழ்க்கை தேடி**

**வந்தன குழந்தை பாட்டில்**

கவிதை எல்லாம் விற்றான்

கைக்கு வந்த காசைக் கொண்டு

தேமா புளிமா கற்றான்.

நாய்கள் ஜாக்கிரதை பலகை

பார்த்துப் பார்த்து வெறுத்து விட்டன

நாய்கள் கூட உலகை.

## டோடோ பறவை

- சிற்பி பாலசுப்ரமணியம்

காணாமல் போன
உனக்காகக்
காடுகள் காத்திருக்கும்

அருவிகள் புரண்டு புரண்டு
அழும்

நீ வளர்த்த
கல்வாரா மரங்களில்
இப்போதிருப்பவை
வெறும் பதினெட்டு
பூக்கிறது காய்க்கிறது
பழுத்துக் கனிகிறது
விதைகளும் விழுகின்றன
முந்நூறு ஆண்டுகளாய்
முளைக்கவில்லை விதைகள்
தழைக்கவில்லை சந்ததிகள்

மரீஷீயஸ் தீவில்
மனித அரக்கரின்
குரூர வேட்டையில்
மறைந்து போன
செல்லமே, டோடோ பறவையே

நீ தின்று கழிக்காத
காரணத்தால்
கல்வாரா பழ விதைகள்
மலடு...மலடு..
முந்நூறு ஆண்டுகளாய்ப்
பாழ் மலடு

காணாமல் போன உனக்காகக்
காடுகள் காத்திருக்கும்.

**தந்தை மகற்காற்றும் உதவி...**

**புவியரசு**

இதைப் பார் மகனே!

மனதில் பதிய வைத்துக் கொள்!

எதற்கும் படமெடுத்துக் கொள்!

இது மண் சாலை அன்று,

ஒரு காலத்தில் நீரோடிக்

கொண்டிருந்த

உனது நதி.

நீ அமரிக்காவுக்கு

சம்பாதிக்கப் போயிருந்தபோது

இதை விற்று விட்டார்கள்.

என்னை அவர்கள் கேட்கவே இல்லை.

**நான் காய்ச்சலில்**

**படுத்திருந்தபோது நடந்திருக்க வேண்டும்.**

**உன் அம்மா சொல்லித்தான்**

**தெரிந்தது,**

**ஆற்றங்கரையில் குளிக்கப் போனபோது**

**அது காணாமற் போனதைக்**

**கண்டுகொண்டு வந்து சொன்னாள்.**

**சந்தேகமே படவேண்டியதில்லை**

**கொஞ்சம் இறங்கி நடந்து பார்!**

**காலில் இறந்தகால ஈரம் தெரியும்.**

**நன்றாகப் பார்த்துப் படமெடுத்துக் கொள்.**

**வருங்கால வரலாற்று**

**ஆவணப் பதிவுக்குப் பயன்படும்.**

**மகனே, அதோ,**

**அந்த மலையைக் கூடப்**

**படம் பிடித்துக்கொள்!**

**அதுவும் நீ அடுத்தமுறை**

**வரும்போது இல்லாமற் போகலாம்!**

**இந்தப் பாழுங் கிணற்றையும்**

**படம் பிடித்துக் கொள்**

**பிளாஷ் போட்டு.**

**அன்பு மகனே, குறிப்பாக**

இந்த மரத்தை விட்டுவிடாதே!

இதுதான்
நமது ஊர் விவசாயிகள்
தூக்குப் போட்டுக் கொள்வதற்காக
ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

## கீழ்வெண்மணி

ஞானக்கூத்தன்

மல்லாந்த மண்ணின் கர்ப்ப

வயிறெனத் தெரிந்த கீற்றுக்

குடிசைகள் சாம்பற் காடாய்ப்

போயின

புகையோடு விடிந்த போதில்

ஊர்க்காரர் திரண்டு வந்தார்

குருவிகள் இவைகள் என்றார்

குழந்தைகள் இவைகள் என்றார்

பெண்களோ இவைகள்? காலி

கன்றுகள் இவைகள் என்றார்

இரவிலே பொசுக்கப்பட்ட

அனைத்துக்கும் அஸ்தி கண்டார்

நாகரிகம் ஒன்று நீங்க.

## கொப்பித்தாளில் கிடந்த (பான் கீ மூனுக்கு விளங்காத) குறிப்பு யாருடையது?

**கவிஞர் ஆழியாள்**

என்ர ஊர் சின்ன ஊர்

பெரியம்மா, பெரியப்பாக்களாலும் - மாமா
அத்தை சித்தி சித்தப்பாக்களாலும்,

கிளி மாமி, விஜி மாமி
வடிவு அன்ரி, வனிதா அன்ரி
சொக்கா அங்கிள்களாலும் நிறைஞ்ச ஊர்.

அம்மம்மா, அம்மப்பாவும்
அப்பப்பா, அப்பம்மாவும்
தாத்தா பாட்டி ஆச்சிகளும் எனக்கு இருந்தார்கள்.

ஒரு நாள்
மீன் விக்கப்போன செல்லம்மா பாட்டியை
மணிக்கூட்டுக் கோபுரத்துக்குக் கீழே கூறாக்கி வீசினார்கள்.

பெரிய மாமாவும், ராஜி அத்தையும்
வெள்ளவத்தைப் பெற்றோல் நெருப்பில் கருகினர்.

பிறகு
ரவிச் சித்தப்பா இயக்கத்துக்குப் போனார்.

வனிதா அன்ரி இன்னோர் இயக்கத்துக்கு போனா.

சேகர் சித்தப்பா காணாமல் போனார்.

சித்தி சின்னாபின்னமாகிச் செத்துப்போனா
(என்ரை ஆசைச் சித்தி)
ஆச்சியையும் போட்டுத் தள்ளினாங்கள்.

சொக்கா அங்கிள் துரோகியாய்த் தொங்கினார்.

நோர்மல் சாவு அப்பப்பாவுக்கு.

சுவிஸில் கிளி மாமி
விஜி மாமியும் மாமாவும் கனடா.

இரண்டு பக்கமும் ஷெல் அடிச்சு பல தலைகள் சிதறிப் போச்சு.

இப்ப
பென்னாம்பெரிய உலகத்தில் இருக்கிறேன் நான் - என்போல
நிறையச் சிறுவர்களோடு.

எங்களைச் சுற்றிலும் முள்வேலி
கண்டுபிடி எங்களைக் கண்டுபிடி - எங்க
கண்டுபிடி எங்களைக் கண்டுபிடி.

மழைக்காலப் பூக்கள்....

வைரமுத்து

அது ஒரு
காலம் கண்ணே
கார்க்காலம்

நனைந்து கொண்டே
நடக்கின்றோம்

ஒரு மரம்

அப்போது அது
தரைக்குத்
தண்ணீர் விழுதுகளை
அனுப்பிக் கொண்டிருந்தது

இருந்தும்

அந்த
ஒழுகுங் குடையின்கீழ்
ஒதுங்கினோம்

அந்த மரம்
தான் எழுதிவைத்திருந்த
பூக்கள் என்னும்
வரவேற்புக்கவிதையின்
சில எழுத்துக்களை
நம்மீது வாசித்தது

இலைகள்
தண்ணீர்க்காசுகளைச்
சேமித்து வைத்து
நமக்காகச் செலவழித்தன

சில நீர்த்திவலைகள்

உன் நேர்வகிடு என்னும்
ஒற்றையடிப்பாதையில்
ஓடிக்கொண்டிருந்தன

அந்தி மழைக்கு நன்றி

ஈரச்சுவாசம்
நுரையீரல்களின் உட்சுவர்களில்
அமுதம் பூசியது.

ஆயினும் - நான்
என் பெருமூச்சில்
குளிர் காய்ந்து கொண்டிருந்தேன்

நம் இருவரிடையே இருந்த
இடைவெளியில்
நாகரிகம் நாற்காலி போட்டு
அமர்ந்திருந்தது.

எவ்வளவோ பேச எண்ணினோம்

ஆனால்
வார்த்தைகள்
ஊலீவலம் வரும் பாதையெங்கும்
மௌனம் பசை தடவி விட்டிருந்தது

உன்முகப்பூவில்
பனித்துளியாகி விடும்
இலட்சியத்தோடு
உன் நெற்றியில் நீர்த்துளிகள்
பட்டுத்தெறித்தன

உனக்குப்
பொன்னாடை போர்த்தும் கர்வத்தோடு
எனது கைக்குட்டையை
எடுத்து நீட்டினேன்

அதில்
உன் நெற்றியை ஒற்றி நீ நீட்டினாய்

நான் கேட்டேன்
இந்தக் கைக்குட்டையை
உலராமல் இருக்க
ஓர்
உத்தி சொல்லக்கூடாதா?

நீ சிரித்தாய்
அப்போது
மழை
என் இருதயத்துக்குள் பெய்தது.

அது ஒரு
காலம் கண்ணே
கார்க்காலம்.

## அன்றங்கே ஒரு நாடிருந்ததே...

கவிஞர் முஹத் வேம்பாயம்

(மொழிபெயர்ப்புக் கவிதை)

அன்றங்கே ஒரு நாடிருந்ததே

அந் நாட்டில் ஆறிருந்ததே

ஆறு நிறைய மீனிருந்ததே

மீனும் முழுகிடக் குளிரிருந்ததே

அன்னமிட வயலிருந்ததே

வயல் முழுவதும் கதிருந்ததே

கதிர் கொத்திடக் கிளி வந்ததே

கிளிகள் பாடும் பாட்டிருந்ததே

அந் நாட்டில் நிழல் இருந்ததே

மண்வழியில் மரம் இருந்ததே

மரத்தடியில் பேசிச் சிரித்திட நண்பர் கூட்டம் நூறிருந்ததே

நல்ல மழை பெய்திருந்ததே

நரகத் தீ சூடில்லையே

தீவட்டிக் கொள்ளை இல்லையே

தின்றது எதுவும் நஞ்சில்லையே

அன்றங்கே ஒரு நாடிருந்ததே

அந் நாட்டில் ஆறிருந்ததே

ஆறு நிறைய மீனிருந்ததே

மீனும் முழுகிடக் குளிரிருந்ததே

அன்னமிட வயலிருந்ததே

வயல் முழுவதும் கதிருந்ததே

கதிர் கொத்திடக் கிளி வந்ததே

கிளிகள் பாடும் பாட்டிருந்ததே

அந் நாட்டில் நிழல் இருந்ததே

மண்வழியில் மரம் இருந்ததே

மரத்தடியில் பேசிச் சிரித்திட நண்பர் கூட்டம் நூறிருந்ததே

நல்ல மழை பெய்திருந்ததே

நரகத் தீ சூடில்லையே

தீவட்டிக் கொள்ளை இல்லையே

தின்றது எதுவும் நஞ்சில்லையே

ஒரு வீட்டில் அடுப்பெரிந்தால் மறுவீட்டில் பசியில்லையே

ஒரு கண்ணு கலங்கி நிறைந்தால் ஓடி வரப் பலருண்டங்கே

நாடெங்கும் மதில்கள் இல்லையே

நடைவெளி இடைவெளி நூறிருந்ததே

நாலுமணிப் பூவிருந்ததே

நல்லோர் சொல்லுக்கு விலையிருந்ததே

அன்றும் பல மதம் இருந்ததே

அதையும் தாண்டி அன்பிருந்ததே

அன்றும் பல மதம் இருந்ததே

அதையும் தாண்டி அன்பிருந்ததே

உன்னைப் படைத்தோன் என்னைப் படைத்தோன்

என்றதொரு சண்டை இல்லையே

உன்னைப் படைத்தோன் என்னைப் படைத்தோன்

என்றதொரு சண்டை இல்லையே
அந் நாட்டைக் கண்டவர் உண்டோ

எங்கே போனது தெளிவுண்டோ

அந் நாடு இறந்து போனதோ

அது வெறும் ஒரு கனவானதோ

அந் நாட்டைக் கண்டவர் உண்டோ

எங்கே போனது தெளிவுண்டோ

அந் நாடு இறந்து போனதோ

அது வெறும் ஒரு கனவானதோ

அந் நாடு இறந்து போனதோ

அது வெறும் ஒரு கனவானதோ

அன்றங்கே ஒரு நாடிருந்ததே

அந் நாட்டில் ஆறிருந்ததே

ஆறு நிறைய மீனிருந்ததே

மீனும் முழுகிடக் குளிரிருந்ததே

அன்னமிட வயலிருந்ததே

வயல் முழுவதும் கதிருந்ததே

கதிர் கொத்திடக் கிளி வந்ததே

கிளிகள் பாடும் பாட்டிருந்ததே

கிளிகள் பாடும் பாட்டிருந்ததே.

மூலம்:மலையாள மொழி
தமிழாக்கம்:கே.ஜே. ஷாகுல் ஹமீது

# இரண்டாம் பருவம்

## திருக்குறள்

### வான்சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

## நாலடியார்

### மெய்ம்மை

இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ. செய்ந்நன்றி
கொன்றாரின் குற்ற முடைத்து.

தக்காரும் தக்கவ ரல்லாரும் தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர் - அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு.

காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனின் பலராவர் - ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட

தொடர்புடையேம் என்பார் சிலர்.

விடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர்.

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.

இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்
உப்போடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை அவரொடு பட்டது - புன்னை
விற்றபூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உற்றபால யார்க்கும் உறும்.

ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம் - பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

யாஅர் உலகத்தோர் சொல்லில்லார்? தேருங்கால்
யாஅர் உபாயத்தின் வாழாதார்? - யாஅர்
இடையாக இன்னாத தெய்தாதார்? யாஅர்
கடைபோகச் செல்வம்உய்த் தார்?

தாஞ்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்று
யாங்கணும் தேரின் பிறிதில்லை - ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூற்றும்கொண் டோடும் பொழுது

தேவாரம்
திருத்தொண்டத்தொகை

## சுந்தரர்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **5**

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **6**

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **7**

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **8**

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை

மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **9**

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **10**

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்ப ராவாரே. **11**

## பராபரக்கண்ணி

குணங்குடி மஸ்தான் சாகிபு

-அண்ட புவனமென்று மாடுதிருக் கூத்தினையான்

கண்டு மகிழ்ந்திட்வே காட்டாய் பராபரமே.

ஆதியா யாண்டவனா யஃததுவாய் நின்றபெருஞ்

சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.

**வேத மறைப்பொருளை வேதாந்தத் துட்கருவை**
**ஓதி யுனையறிந்தா ருண்டோ பராபரமே.**

**அண்ட புவனமுட னாகாச மென்றுசும்பிக்**
**கொண்ட மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே.**

**நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்**
**பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே.**

**பேராற் பெரிய பெரும்பொருளே பேதைதனக்**
**காரா ரிருந்தும்பல னாமோ பராபரமே.**

**மாறாய நற்கருணை மாவருள் சித்தித்திடவே**
**பாராயோ வையா பகராய் பராபரமே.**

**ஆனாலு முன்பாதம் யாசித் திருப்பதற்குத்**
**தானா யிரங்கியரு டாராய் பராபரமே.**

**நாதாந்த மூல நடுவீட்டுக் குள்ளிருக்கு**
**மாதவத்தோர்க் கான மருவே பராபரமே.**

**உடலுக் குயிரேயென் னுள்ளமே யுன்பதத்தைக்**
**கடலுமலை யுந்திரிந்துங் காணேன் பராபரமே.**

**மாந்திரத்துக் கெட்டா மறைப்பொருளே மன்னுயிரே**

சேர்ந்தவெழு தோற்றத்தின் சித்தே பராபரமே

தனியேனுக் காதரவு தாரணியி லில்லாமல்
அனியாய மாவதுனக் கழகோ பராபரமே.

ஓடித் திரிந்தலைந்து முன்பாதங் காணாமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.

தூராதி தூரந்தொலைத்துமதி யுன்பாதம்
பாராத பாவத்தாற் பயந்தேன் பராபரமே.

தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே
ஈடுனக்கு முண்டோ விறையே பராபரமே.
.
அரிய பெரும்பொருளே யன்பா யொருவார்த்தை
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.

ஐயோ வென்க்குதவு மாதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே.

எத்திசையு நோக்கி னிசையா த் திருக்கூத்தாய்
வித்தைவிளை யாட்டு விளைப்பாய் பராபரமே.

எப்பொழுது முன்பதத்தி லென்கருத்தே யெய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தா ளிறையே பராபரமே.

**வாதுக் கடாவரும், வம்பரைப்போற் றோஷிமனம்**

**ஏதுக் கடர்வதியா னெளியேன் பராபரமே.**

**பிள்ளைச் சிறு விண்ணப்பம்**

**– இராமலிங்க அடிகளார்**

**தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்**

**தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்**

**பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப்**

**பேசிய தந்தையும் தாயும்**

**பொடித்திரு மேனி அம்பலத் தாடும்**

**புனிதநீ ஆதலால் என்னை**

**அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்**

**அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.**

**பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம்**

**பெற்றவர் அறிவரே அல்லால்**

**மற்றவர் அறியார் என்றனை ஈன்ற**

**வள்ளலே மன்றிலே நடிக்கும்**

**கொற்றவ ஓர்எண் குணத்தவ நீதான்**

**குறிக்கொண்ட கொடியனேன் குணங்கள்**

முற்றும்நன் கறிவாய் அறிந்தும்என் றனைநீ

முனிவதென் முனிவுதீர்ந் தருளே.

வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை

விரும்பினும் அங்ஙனம் புரியச்

சம்மதிக் கின்றார் அவன்றனைப் பெற்ற

தந்தைதாய் மகன்விருப் பாலே

இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலைநீ

என்றனை விழைவிக்க விழைந்தேன்

செம்மதிக் கருணைத் திருநெறி இதுநின்

திருவுளம் அறியுமே எந்தாய்.

பொய்பிழை அனந்தம் புகல்கின்றேன் அதில்ஓர்

புல்முனை ஆயினும் பிறர்க்கு

நைபிழை உளதேல் நவின்றிடேன் பிறர்பால்

நண்ணிய கருணையால் பலவே.

கைபிழை யாமை கருதுகின் றேன்நின்

கழற்பதம் விழைகின்றேன் அல்லால்

செய்பிழை வேறொன் றறிகிலேன் அந்தோ

திருவுளம் அறியுமே எந்தாய்.

அப்பணி முடி என் அப்பனே மன்றில்

ஆனந்த நடம்புரி அரசே

**இப்புவி தனிலே அறிவுவந் ததுதொட்**

**டிந்தநாள் வரையும்என் தனக்கே**

**எப்பணி இட்டாய் அப்பணி அலதென்**

**இச்சையால் புரிந்ததொன் றிலையே**

**செப்புவ தென்நான் செய்தவை எல்லாம்**

**திருவுளம் அறியுமே எந்தாய்.5**

## திருக்குற்றாலக் குறவஞ்சி

### குறத்தி மலை வளங் கூறல்

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

**கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்**

**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**

**தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்**

**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

**கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்**

**குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.** **1**

**முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**

**முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்**

**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**

**கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்**

**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**

தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலை எங்கள் மலையே. 2

ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூட மலைஎங்கள் மலையே. 3

கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே
கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே
சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மேச
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே
வானிரவி முழைகள் தொறும் நுழையுமலை அம்மே
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
துங்கர்திரி கூடமலை எங்கள் மலை அம்மே. 4

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்

முக்கூடல் பள்ளு

பள்ளியர் ஏசல்

வழிபடு தெய்வத்தை முன்னிறுத்தி

ஒருவரை ஒருவர் பழித்து ஏசுதல்

சாதிப்பது உனக்குவரும்
மருதூப்பள்ளி-நரிதான்
பரியாய்ச்சா தித்தான்உங்கள்
சம்புவல் லோடி
பேதிக்கச்சா திக்கவாராய்
முக்கூடற்பள்ளி-கல்லைப்
பெண்ணாகச்சா தித்தானுங்கள்
கண்ண னல்லோடி.

மங்கையொரு பங்கிருக்க
யோகியென்றுதான்-கையில்
மழுவேந்தி நின்றானுங்கள்
மத்த னல்லோடி
கொங்கைதனில் நாச்சியாரைச்
சங்கையில்லாமற்-பண்டு
கூடிநெய்யிற் கையிட்டானுங்
கொண்ட லல்லோடி.

காமனை மருகனென்று
எண்ணிப்பாராமற்-காய்ந்து
கண்ணிலேறு பட்டானுங்கள்
கர்த்தனல் லோடி
மாமனென்று பாராமல்முன்
கஞ்சனைக்கொன்றே-கண்கள்
மாறாதேபூப் பட்டானுங்கள்
மாயனல் லோடி.

மாதொருத்திக் காசைப்பட்டுப்
பொன்னின் மயமாம்-பனி

மலையேறிப் போனானுங்கள்
மத்த னல்லோடி
காதலித்துத் தம்பியுடன்
சீதை பொருட்டால்-அன்று
கடலேறிப் போனானுங்கள்
கண்ண னல்லோடி.

தான்பசுப்போல் நின்றுகன்றைத்
தேர்க்காலில் விட்டே-சோழன்
தன்மகனைக் கொன்றானுங்கள்
தாணு வல்லோடி
வான்பழிக்கு ளாய்த்தவசி
போல மறைந்தே-நின்று
வாலியைக் கொன்றானுங்கள்
மாய னல்லோடி.

## திருமந்திரம்

### திருமூலர்

**அன்புடைமை**

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 1

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. 2

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே. 3

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை

ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே. 4

என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்அன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்அன் பெனக்கே தலைநின்ற வாறே. 5

தானொரு காலம் சயம்பு என் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே. 6

முன்படைத்து இன்பம் படைத்த முதலிடை
அன்புஅடைத்து எம்பெரு மானை அறிகிலார்
வன்படைத்து இந்த அகலிடம் வாழ்வினில்
அன்புஅடைத் தான்தன் அகலிடத் தானே. 7

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவன் என்று ஏத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. 8

நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசு அறிந் தேயும் மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரானென்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே. 9

அன்பின் உள் ளான்புறத்தான் உட லாயுளான்
முன்பின்உள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பின்உள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே. 10

சித்தர் பாடல்கள்
சிவவாக்கியம்
(ஆசிரியர் : சிவவாக்கியர்)

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே. 3

உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்றவல்லீரேல்
விருத்தரரும் பாலராவீர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே. 4

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனைமுன்னம் வெட்டவேணும் என்பனே
நடுவன்வந்து அழைத்தபோது நாறும்இந்த நல்லுடல்
சுடலைமட்டும் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பாரே.
[நந்துதல் - இச்சை கொள்ளுதல்; நடுவன் - எமன்] 5

என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்தது இல்லையே
என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை யாவர்காண வல்லரோ?
என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டனே. 6

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை,
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாயையோ?
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள்நீ உனக்குள்நான் இருக்குமாற தெங்ஙனே. 7

வித்தாரச் செய்யுட்கள்.

காளமேகப் புலவர்

ககர வருக்கப் பாட்டு

காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூக் காக்கைக்குக் கொக்கொக்க-கைக்கைக்குக்

காக்கைக்குக் கைக்கைக்கா கா.
தகர வருக்கப் பாட்டு

தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைதத்தா தாதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது?

தாதி தூதோ தீது

இதுவும் தகர வருக்கச் செய்யுள்தான். 'தூது' என்ற சொல் பன்முறை வருமாறு பாடியுள்ளார். இங்ஙனம் பாடுமாறு ஒருவர் கேட்கக் கவிஞர் பாடியதாகக் கொள்க.

தாதிதூ தோதீது தத்தைத்தூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த
துத்திதத் தாதே துதித்துத்தே தொத்தீது
தித்தித்த தோதித் திதி.

.

## உரை நடைக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ள நூல்கள்

1.தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு (முதற் பகுதி)

திரு. வி. கலியாணசுந்தரனார்

**பாரி நிலையம் 1990**

**2.**தமிழர் வீரம்

ரா.பி. சேதுப்பிள்ளை

**பழனியப்பா பிரதர்ஸ் 2007**

**3.**நல்வாழ்வு

மு.வ

**பாரி நிலையம் 1990**

**4.**காலம் தேடும் தமிழ்

மணவை முஸ்தபா

**மீரா பப்ளிகேஷன்ஸி 1989**

**5.** தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள்

–டாக்டர் கி.கருணாகரன்

தமிழ்நாடு தொழில்நுட்ப அமைப்புக் கழகம் 1990

6. பண்புடையோரின் பல்துறைப் பார்வைகள்

ஆசிரியர் குழு

நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை-50 2023

7. அறநெறி

முனைவர் சி.பாலசுப்பிரமணியன்

நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை-50 2023

8.தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள்

- முனைவர்.துரை மணிகண்டன்
த.வானதி
கமலினி பதிப்பகம்

## மூன்றாம் பருவம்
## செய்யுள் திரட்டு
## சிலப்பதிகாரம்
## வரந்தரு காதை
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

**இளங்கோவடிகள்**

"செங்குட்டுவன் தேவந்தியிடம் மணிமேகலையின் துறவு பற்றி வினாவுதல்"

வட திசை வணங்கிய வானவர் பெருந்தகை
கடவுள் கோலம் கண்-புலம் புக்க பின்,
தேவந்திகையைச் செவ்விதின் நோக்கி,
'வாய் எடுத்து அரற்றிய மணிமேகலை யார்?
யாது அவள் துறத்தற்கு ஏது? இங்கு, உரை' என-

"தேவந்தி மணிமேகலையின் துறவு உரைத்தல்"

‘கோமகன் கொற்றம் குறைவு இன்று ஓங்கி
நாடு பெரு வளம் சுரக்க’ என்று ஏத்தி,
அணி மேகலையார் ஆயத்து ஓங்கிய
மணிமேகலை-தன் வான் துறவு உரைக்கும்:
‘மை ஈர் ஓதி வகை பெறு வனப்பின்
ஐ-வகை வகுக்கும் பருவம் கொண்டது;
செவ் வரி ஒழுகிய செழுங் கடை மழைக் கண்
அவ்வியம் அறிந்தன; அது தான் அறிந்திலள்;
ஒத்து ஒளிர் பவளத்துள் ஒளி சிறந்த
நித்தில இள நகை நிரம்பா அளவின;
புணர் முலை விழுந்தன; புல் அகம் அகன்றது;
தளர் இடை நுணுகலும், தகை அல்குல் பரந்தது;
குறங்கு இணை திரண்டன; கோலம் பொறாஅ
நிறம் கிளர் சீறடி நெய் தோய் தளிரின;
தலைக்கோல் ஆசான் பின் உளனாக,
குலத் தலை மாக்கள் கொள்கையின் கொள்ளார்;
யாது நின் கருத்து? என் செய்கோ?” என,
மாதவி நற்றாய் மாதவிக்கு உரைப்ப-
“வருக, என் மட மகள் மணிமேகலை!” என்று,
உருவிலாளன் ஒரு பெரும் சிலையொடு
விரை மலர் வாளி வெறு நிலத்து எறிய,
கோதைத் தாமம் குழலொடு களைந்து,
போதித்தானம் புரிந்து, அறம்படுத்தனள்-
ஆங்கு, அது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நல் மணி உறு கடல் வீழ்த்தோர்-
தம்மின் துன்பம் தாம் நனி எய்த,
செம்மொழி மாதவர், “சேயிழை நங்கை
தன் துறவு எமக்குச் சாற்றினள்” என்றே
அன்பு உறு நல் மொழி அருளொடும் கூறினர்:
பருவம் அன்றியும் பைந் தொடி நங்கை
திரு விழை கோலம் நீங்கினள் ஆதலின்,
அரற்றினென்’ என்று, ஆங்கு, அரசற்கு உரைத்தபின்-

"தேவந்தியின்மேல் சாத்தன் ஆவேசமுற்று எழுதல்"

குரல் தலைக் கூந்தல் குலைந்து பின் வீழ;
துடித்தனள் புருவம்; துவர் இதழ்ச் செவ் வாய்
மடித்து, எயிறு அரும்பினள்; வரு மொழி மயங்கினள்;
திரு முகம் வியர்த்தனள்; செங்கண் சிவந்தனள்;
கைவிட்டு ஓச்சினள்: கால் பெயர்த்து எழுந்தனள்
பலரறி வாராத் தெருட்சியள் மருட்சியள்
உலறிய நாவினள்; உயர் மொழி கூறித்
தெய்வம் உற்று எழுந்த தேவந்திகை-தான்-

"தெய்வம் உற்ற தேவந்தியின் உரை"

'கொய் தளிர்க் குறிஞ்சிக் கோமான்-தன் முன்
கடவுள்-மங்கலம் காணிய வந்த
மடமொழி நல்லார் மாண் இழையோருள்,
அரட்டன் செட்டி-தன் ஆய்-இழை ஈன்ற
இரட்டையம் பெண்கள் இருவரும் அன்றியும்,
ஆடகமாடத்து அரவு-அணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறு மகள் ஈங்கு உளள்:
மங்கல மடந்தை கோட்டத்து-ஆங்கண்
செங் கோட்டு உயர் வரைச் சேண் உயர் சிலம்பில்,
பிணிமுக நெடுங்கல் பிடர்த்தலை, நிரம்பிய
அணி கயம் பல உள; ஆங்கு அவை இடையது,
கடிப்பகை நுண் கலும், கவிர் இதழ்க் குறுங் கலும்,
இடிக் கலப்பு அன்ன இழைந்து உகு நீரும்,
உண்டு ஓர் சுனை; அதனுள் புக்கு ஆடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர்; ஆதலின்,
ஆங்கு-அது கொணர்ந்து, ஆங்கு, ஆய்-இழை கோட்டத்து
ஓங்கு இருங் கோட்டி இருந்தோய்! உன் கை,
"குறிக்கோள் தகையது; கொள்க" எனத் தந்தேன்;
உறித் தாழ் கரகமும் உன் கையது அன்றே;
கதிர் ஒழிகாறும் கடவுள் தன்மை
முதிராது; அந்நீர் முத் திற மகளிரைத்
தெளித்தனை ஆட்டின், இச் சிறு குறுமகளிர்

ஒளித்த பிறப்பினர் ஆகுவர் காணாய்;
பாசண்டன் யான்; பார்ப்பனி-தன்மேல்,
மாடல மறையோய்! வந்தேன்' என்றலும்-

"சாத்தனது வரலாற்றையும், அவன் கரகம் தந்ததையும் மாடலன் கூறுதல்"

மன்னவன் விம்மிதம் எய்தி, அம் மாடலன்-
தன் முகம் நோக்கலும்-தான் நனி மகிழ்ந்து,
'கேள் இது, மன்னா! கெடுக நின் தீயது!
மாலதி என்பாள் மாற்றாள் குழவியைப்
பால் சுரந்து ஊட்ட, பழ வினை உருத்து,
கூற்று உயிர் கொள்ள, குழவிக்கு இரங்கி,
ஆற்றாத் தன்மையள், ஆர் அஞர் எய்தி,
பாசண்டன்பால் பாடுகிடந்தாட்கு,
"ஆசு இல் குழவி அதன் வடிவு ஆகி
வந்தனன்; அன்னை! நீ வான் துயர் ஒழிக" என,
செந்திறம் புரிந்தோன் செல்லல் நீக்கி,
பார்ப்பனி-தன்னொடு பண்டைத் தாய்பால்
காப்பியத் தொல் குடிக் கவின் பெற வளர்ந்து,
தேவந்திகையைத் தீவலம் செய்து,
நால்-ஈர்-ஆண்டு நடந்ததன் பின்னர்,
மூவா இள நலம் காட்டி, "என் கோட்டத்து,
நீ வா" என்றே நீங்கிய சாத்தன்,
மங்கலமடந்தை கோட்டத்து ஆங்கண்,
அங்கு உறை மறையோனாகத் தோன்றி,
உறித் தாழ் கரகமும் என் கைத் தந்து,
குறிக்கோள் கூறிப் போயினன்; வாரான்:
ஆங்கு அது கொண்டு போந்தேன் ஆதலின்,
ஈங்கு இம் மறையோள்-தன்மேல் தோன்றி,
"அந் நீர் தெளி" என்று அறிந்தோன் கூறினன்-

"மாடலன் தெய்வம் சுட்டிய மூன்று பெண்களின் மேலும் கரக நீரைத் தெளித்தல்"

மன்னர் கோவே! மடந்தையர்-தம்மேல்
தெளித்து ஈங்கு அறிகுவம்’ என்று அவன் தெளிப்ப-

"பெண்கள் மூவரும் பழம் பிறப்பு உணர்ந்து, கூறிய செய்திகள் கண்ணகி தாய் கூற்று"

ஒளித்த பிறப்பு வந்து உற்றதை ஆதலின்,
‘புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்
இகழ்ந்ததற்கு இரங்கும் என்னையும் நோக்காய்;
ஏதில் நல் நாட்டு யாரும் இல் ஒரு தனி,
காதலன்-தன்னொடு கடுந் துயர் உழந்தாய்;
யான் பெறு மகளே! என் துணைத் தோழீ!
வான் துயர் நீக்கும் மாதே, வாராய்!’-

"கோவலன் மாதா வார்த்தை"

‘என்னோடு இருந்த இலங்கு இழை நங்கை-
தன்னோடு இடை இருள் தனித் துயர் உழந்து,
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்;
யான் அது பொறேஎன்; என் மகன், வாராய்!’-

"மாதரி வார்த்தை"

வையை வான் துறைப் பெயர்ந்தேன்;
உருகெழு மூதூர் ஊர்க் குறுமாக்களின்
வந்தேன் கேட்டேன்; மனையில் காணேன்;
எந்தாய்! இளையாய்! எங்கு ஒளித்தாயோ?’-
என்று, ஆங்கு, அரற்றி, இனைந்துஇனைந்து ஏங்கி,
பொன் தாழ் அகலத்துப் போர் வெய்யோன் முன்,
குதலைச் செவ் வாய்க் குறுந் தொடி மகளிர்
முதியோர் மொழியின் முன்றில் நின்று அழ-

"செங்குட்டுவனது முகக் குறிப்பை அறிந்து, மாடலன் கூறுதல்"

தோடு அலர் போந்தைத் தொடு கழல் வேந்தன்
மாடல மறையோன்-தன் முகம் நோக்க,
‘மன்னர் கோவே, வாழ்க!’ என்று ஏத்தி,
முந்நூல் மார்பன் முன்னியது உரைப்போன்;
‘மறையோன் உற்ற வான் துயர் நீங்க,
உறை கவுள் வேழக் கைஅகம் புக்கு,
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலி-தன்மேல் காதலர் ஆதலின்,
மேல்நிலை உலகத்து அவருடன் போகும்
தாவா நல் அறம் செய்திலர்; அதனால்,
அம் செஞ் சாயல் அஞ்சாது அணுகும்
வஞ்சி மூதூர் மா நகர் மருங்கின்,
பொன்-கொடி-தன்மேல் பொருந்திய காதலின்,
அற்பு உளம் சிறந்து-ஆங்கு அரட்டன் செட்டி
மட மொழி நல்லாள் மனம் மகிழ் சிறப்பின்
உடன்வயிற்றோராய் ஒருங்குடன் தோன்றினர்-
ஆயர் முதுமகள் ஆய்-இழை-தன்மேல்
போய பிறப்பில் பொருந்திய காதலின்,
ஆடிய குரவையின், அரவு-அணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறு மகள் ஆயினள்-
நல் திறம் புரிந்தோர் பொற்படி எய்தலும்,
அற்பு உளம் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்,
அறப் பயன் விளைதலும், மறப்பயன் விளைதலும்,
பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும்,
புதுவது அன்றே; தொன்று இயல் வாழ்க்கை-
ஆன் ஏறு ஊர்ந்தோன் அருளின் தோன்றி,
மா நிலம் விளக்கிய மன்னவன் ஆதலின்,
செய் தவப் பயன்களும், சிறந்தோர் படிவமும்,
கை அகத்தன போல், கண்டனை அன்றே;
ஊழிதோறு உழி உலகம் காத்து,
நீடு வாழியரோ, நெடுந்தகை!’ என்ற
மாடல மறையோன்-தன்னொடும் மகிழ்ந்து-

"பத்தினிக் கோட்டத்திற்கு மானியம் அளித்து, நித்தல்
விழாச் செய்யத் தேவந்தியை நியமித்து, கோட்டத்தை

**வலம் செய்து, சந்நிதியில் செங்குட்டுவன் நிற்றல்"**

பாடல்சால் சிறப்பின் பாண்டி நல் நாட்டுக்
கலி கெழு கூடல் கதழ் எரி மண்ட
முலைமுகம் திருகிய மூவா மேனி
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து,
'நித்தல் விழா அணி நிகழ்க' என்று ஏவி,
'பூவும், புகையும், மேவிய விரையும்,
தேவந்திகையைச் செய்க' என்று அருளி,
வலமுறை மும் முறை வந்தனன் வணங்கி,
உலக மன்னவன் நின்றன் முன்னர்-

**"ஆரிய மன்னர் முதலியோரது வேண்டுகோள்"**

அரும் சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெரும் சிறைக்கோட்டம் பிரிந்த மன்னரும்,
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்,
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்,
'எம் நாட்டு ஆங்கண் இமையவரம்பனின்
நல்நாள் செய்த நாள் அணி வேள்வியில்
வந்து ஈக' என்றே வணங்கினர் வேண்ட-

**"பத்தினித் தெய்வத்தின் அருள்வாக்கு"**

'தந்தேன் வரம்!' என்று எழுந்தது ஒரு குரல்-

**"செங்குட்டுவன் வேள்விச் சாலை புகுதல்"**

ஆங்கு, அது கேட்ட அரசனும், அரசரும்,
ஓங்கு இருந் தானையும், உரையோடு ஏத்த,
வீடு கண்டவர்போல், மெய்ந் நெறி விரும்பிய
மாடல மறையோன்-தன்னொடும் கூடி,
தாழ் கழல் மன்னர் தன் அடி போற்ற,
வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்-

"தேவந்தியின்மேல் கண்ணகி ஆவேசித்து, பத்தினிக் கோட்டம்
சென்ற இளங்கோ அடிகளது துறவின்
சிறப்பினைப் புகழ்ந்துரைத்தல்"

யானும் சென்றேன்; என் எதிர் எழுந்து,
தேவந்திகைமேல் திகழ்ந்து தோன்றி,
'வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடை
நுந்தை தாள் நிழல் இருந்தோய்! நின்னை
"அரைசு வீற்றிருக்கும் திருப் பொறி உண்டு" என்று,
உரைசெய்தவன் மேல் உருத்து நோக்கி,
கொங்கு அவிழ் நறுந் தார்க் கொடித் தேர்த் தானைச்
செங்குட்டுவன்-தன் செல்லல் நீங்க,
பகல் செல் வாயில் படியோர்-தம்முன்,
அகலிடப் பாரம் அகல நீக்கி,
சிந்தை செல்லாச் சேண் நெடுந் தூரத்து,
அந்தம் இல் இன்பத்து, அரசு ஆள் வேந்து' என்று-

"அடிகள் அருளும் அறிவுரை"

என் திறம் உரைத்த இமையோர் இளங்கொடி-
தன் திறம் உரைத்த தகைசால் நல் மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!-
பரிவும் இடுக்கணும், பாங்குற, நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்
பொய் உரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊன் ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம் பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீ நட்பு இகழ்மின்;
பொய்க் கரி போகல்மின்; பொருள்-மொழி நீங்கல்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர் மனை அஞ்சுமின்; பிழை உயிர் ஓம்புமின்;
அற மனை காமின்; அல்லவை கடிமின்;

கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும், விரகினில், ஒழிமின்
இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையா
உள நாள் வரையாது ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறு துணை தேடுமின்-
மல்லல் மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கு-என்,

## மணிமேகலை

### சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

சீத்தலைச் சாத்தனார்

முதியாள் திருந்து அடி மும்மையின் வணங்கி
மது மலர்த் தாரோன் வஞ்சினம் கூற
'ஏடு அவிழ் தாரோய்! எம் கோமகள் முன்
நாடாது துணிந்து நா நல்கூர்ந்தனை' என
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்
உதயகுமரன் உள்ளம் கலங்கி
பொதி அறைப் பட்டோர் போன்று மெய் வருந்தி
"அங்கு அவள் தன் திறம் அயர்ப்பாய்" என்றே
செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம்

பை அரவு அல்குல் பலர் பசி களையக்
கையில் ஏந்திய பாத்திரம் திப்பியம்
"முத்தை முதல்வி அடி பிழைத்தாய்" எனச்
சித்திரம் உரைத்த இதூஉம் திப்பியம்
இந் நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்
பின் அறிவாம்' எனப் பெயர்வோன் தன்னை
அகல் வாய் ஞாலம் ஆர் இருள் உண்ண
பகல் அரசு ஓட்டி பணை எழுந்து ஆர்ப்ப
மாலை நெற்றி வான் பிறைக் கோட்டு
நீல யானை மேலோர் இன்றிக்

காமர் செங் கை நீட்டி வண்டு படு
பூ நாறு கடாஅம் செருக்கி கால் கிளர்ந்து
நிறை அழி தோற்றமொடு தொடர முறைமையின்
நகர நம்பியர் வளையோர் தம்முடன்
மகர வீணையின் கிளை நரம்பு வடித்த
இளி புணர் இன் சீர் எஃகு உளம் கிழிப்பப்
பொறாஅ நெஞ்சில் புகை எரி பொத்தி
பறாஅக் குருகின் உயிர்த்து அவன் போய பின்
உறையுள் குடிகை உள்வரிக் கொண்ட
மறு இல் செய்கை மணிமேகலை தான்
'மாதவி மகள் ஆய் மன்றம் திரிதரின்
காவலன் மகனோ கைவிடலீ யான்!'
காய்பசியாட்டி காயசண்டிகை என
ஊர் முழுது அறியும் உருவம் கொண்டே
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணை ஆகி
"ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன் அவர்
மேற்சென்று அளித்தல் விழுத்தகைத்து" என்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தனர் ஆம்' என
முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த
அமுதசுரபியை அங்கையின் வாங்கிப்

பதிஅகம் திரிதரும் பைந் தொடி நங்கை
அதிர் கழல் வேந்தன் அடி பிழைத்தாரை
ஒறுக்கும் தண்டத்து உறு சிறைக்கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்து உயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆர் உயிர் மாக்களை
வாங்கு கைஅகம் வருந்த நின்று ஊட்டலும்
'ஊட்டிய பாத்திரம் ஒன்று' என வியந்து
கோட்டம் காவலர் 'கோமகன் தனக்கு இப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்பு உடைத்தாக இசைத்தும்' என்று ஏகி

நெடியோன் குறள் உரு ஆகி நிமிர்ந்து தன்
அடியில் படியை அடக்கிய அந் நாள்
நீரின் பெய்த மூரி வார் சிலை
மாவலி மருமான் சீர் கெழு திரு மகள்
சீர்த்தி என்னும் திருத் தகு தேவியொடு
போது அவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழல் இசை காட்டக்

பொங்கர் வண்டு இனம் நல் யாழ்செய்ய
வரிக் குயில் பாட மா மயில் ஆடும்
விரைப் பூம் பந்தர் கண்டு உளம் சிறந்தும்

புணர் துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மட மயில் பேடையும் தோகையும் கூடி
இரு சிறைக் விரித்து ஆங்கு எழுந்து உடன் கொட்பன
ஒரு சிறைக் கண்டு ஆங்கு உள் மகிழ்வு எய்தி
'மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவை இஃது ஆம்' என நோக்கியும்
கோங்கு அலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற இருந்த பல் பொறி மஞ்ஞையைச்
செம் பொன் தட்டில் தீம் பால் ஏந்திப்
பைங் கிளி ஊட்டும் ஓர் பாவை ஆம்' என்றும்

அணி மலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
பிணவுக் குரங்கு ஏற்றி பெரு மதர் மழைக் கண்
மடவோர்க்கு இயற்றிய மா மணி ஊசல்
கடுவன் ஊக்குவது கண்டு நகை எய்தியும்
பாசிலை செறிந்த பசுங் கால் கழையொடு
வால் வீ செறிந்த மராஅம் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றனன் ஆம் என
தொடி சேர் செங் கையின் தொழுது நின்று ஏத்தியும்
ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்
நாடகக் காப்பிய நல் நூல் நுனிப்போர்

பண் யாழ் நரம்பில் பண்ணு முறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவிக் கண் எறி தெரிவோர்
குழலொடு கண்டம் கொளச் சீர் நிறுப்போர்
பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோர்
ஆரம் பரிந்த முத்தம் கோப்போர்
ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்
குங்கும வருணம் கொங்கையின் இழைப்போர்
அம் செங்கழுநீர் ஆய் இதழ் பிணைப்போர்
நல் நெடுங் கூந்தல் நறு விரை குடைவோர்
பொன்னின் ஆடியில் பொருந்துபு நிற்போர்

ஆங்கு அவர் தம்மோடு அகல் இரு வானத்து
வேந்தனின் சென்று விளையாட்டு அயர்ந்து
குருந்தும் தளவும் திருந்து மலர்ச் செருந்தியும்

முருகு விரி முல்லையும் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்து நகை செய்து
குறுங் கால் நகுலமும் நெடுஞ் செவி முயலும்
பிறழ்ந்து பாய் மானும் இறும்பு அகலா வெறியும்
'வம்' எனக் கூஉய் மகிழ் துணையொடு தன்
செம்மலர்ச் செங் கை காட்டுபு நின்று
மன்னவன் தானும் மலர்க் கணை மைந்தனும்

இன் இளவேனிலும் இளங்கால் செல்வனும்
எந்திரக் கிணறும் இடும் கல் குன்றமும்
வந்து வீழ் அருவியும் மலர்ப் பூம் பந்தரும்
பரப்பு நீர்ப் பொய்கையும் கரப்பு நீர்க் கேணியும்
ஒளித்து உறை இடங்களும் பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்து விளையாடி
மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண் தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டு இனிது இயற்றிய கண் கவர் செய்வினைப்

பவளத் திரள் கால் பல் மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண் வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகை பெறு வனப்பின்
பைஞ் சேறு மெழுகாப் பசும் பொன் மண்டபத்து
இந்திர திருவன் சென்று இனிது ஏறலும்
வாயிலுக்கு இசைத்து மன்னவன் அருளால்
சேய் நிலத்து அன்றியும் செவ்வியின் வணங்கி
எஞ்சா மண் நசை இகல் உளம் துரப்ப
வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி

முறம் செவி யானையும் தேரும் மாவும்
மறம் கெழு நெடு வாள் வயவரும் மிடைந்த
தலைத் தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக் கயல் நெடுங் கொடி செரு வேல் தடக் கை
ஆர் புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலி கெழு தடக் கை மாவண்கிள்ளி!
ஒளியொடு வாழி ஊழிதோறு ஊழி!
வாழி எம் கோ மன்னவர் பெருந்தகை!
கேள் இது மன்னோ! கெடுக நின் பகைஞர்

யானைத்தீ நோய்க்கு அயர்ந்து மெய் வாடி இம்
மா நகர்த் திரியும் ஓர் வம்ப மாதர்
அருஞ் சிறைக்கோட்டத்து அகவயின் புகுந்து
பெரும் பெயர் மன்ன! நின் பெயர் வாழ்த்தி
ஐயப் பாத்திரம் ஒன்று கொண்டு ஆங்கு
மொய் கொள் மாக்கள் மொசிக்க ஊண் சுரந்தனள்
ஊழிதோறு ஊழி உலகம் காத்து
வாழி எம் கோ மன்னவ!' என்றலும்
'வருக வருக மடக்கொடி தான்' என்று
அருள் புரி நெஞ்சமொடு அரசன் கூறலின்

வாயிலாளரின் மடக்கொடி தான் சென்று
'ஆய் கழல் வேந்தன் அருள் வாழிய!' எனத்
'தாங்கு அருந் தன்மைத் தவத்தோய் நீ யார்?
யாங்கு ஆகியது இவ் ஏந்திய கடிஞை?' என்று
அரசன் கூறலும் ஆய் இழை உரைக்கும்
'விரைத் தார் வேந்தே! நீ நீடு வாழி!
விஞ்சை மகள் யான் விழவு அணி மூதூர்
வஞ்சம் திரிந்தேன் வாழிய பெருந்தகை!
வானம் வாய்க்க! மண் வளம் பெருகுக!
தீது இன்றாக கோமகற்கு! ஈங்கு ஈது

ஐயக் கடிஞை அம்பல மருங்கு ஓர்
தெய்வம் தந்தது திப்பியம் ஆயது
யானைத்தீ நோய் அரும் பசி கெடுத்தது
ஊன் உடை மாக்கட்கு உயிர் மருந்து இது' என
'யான் செயற்பாலது என் இளங்கொடிக்கு?' என்று
வேந்தன் கூற மெல் இயல் உரைக்கும்
'சிறையோர் கோட்டம் சீத்து அருள் நெஞ்சத்து
அறவோர்க்கு ஆக்குமது வாழியர்!' என
அருஞ் சிறை விட்டு ஆங்கு ஆய் இழை உரைத்த
பெருந் தவர் தம்மால் பெரும் பொருள் எய்த
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன் அரசு ஆள் வேந்து என்

சீவகசிந்தாமணி

- நாமகள்இலம்பகம்

திருத்தக்க தேவர்

**30**

நா வீற்று இருந்த புல மா மகளோடு நன் பொன்
பூ வீற்று இருந்த திருமாமகள் புல்ல நாளும்
பா வீற்று இருந்த கலை பார் அறச் சென்ற கேள்விக்
கோ வீற்று இருந்த குடி நாட்டு அணி கூறல் உற்றேன்

**31**

காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூ மாண்ட தீம் தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே

**32.**

இலங்கல் ஆழியினான் களிற்று ஈட்டம் போல்
கலங்கு தெண் திரை மேய்ந்து கண மழை
பொலம் கொள் கொன்றையினான் சடை போல் மின்னி
விலங்கல் சேர்ந்து விண் ஏறி விட்டு ஆர்த்தவே

**33**

தேன் நிரைத்து உயர் மொய்வரைச் சென்னியின்
மேல் நிரைத்து விசும்பு உற வெள்ளி வெண்
கோல் நிரைத்தன போல் கொழுந் தாரைகள்
வான் நிரைத்து மணந்து சொரிந்தவே

**34.**

குழவி வெண் மதிக் கோடு உழக் கீண்டு தேன்
முழவின் நின்று அதிர் மொய் வரைச் சென்னியின்
இழியும் வெள் அருவித் திரள் யாவையும்
குழுவின் மாடத் துகில் கொடி போன்றவே

**35**

இலங்கு நீள் முடி இந்திரன் மார்பின் மேல்
விலங்கி வீழ்ந்த முத்தாரமும் போன்றவை

நலம் கொள் பொன்னொடு நல் மணி சிந்தலால்
கலன் பெய் பேழை கவிழ்த்தவும் போன்றவே

**36.**

வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழு நிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர் தொறும் உய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே

**37.**

மையல் யானையின் மும் மதம் ஆர்ந்து தேன்
ஐய பொன் அசும்பு ஆடி அளைந்து உராய்ச்
செய்ய சந்தனம் தீம் பழம் ஆதியா
நைய வாரி நடந்தது நன்று அரோ

**38**

வீடு இல் பட்டினம் வௌவிய வேந்து எனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்து போய்
மோடு கொள் புனல் மூரி நெடுங் கடல்
நாடு முற்றியதோ என நண்ணிற்றே

**39.**

திரை பொரு கனை கடல் செல்வன் சென்னி மேல்
நுரை எனும் மாலையை நுகரச் சூட்டுவான்
சரை எனும் பெயர் உடைத் தடம் கொள் வெம் முலைக்
குரை புனல் கன்னி கொண்டு இழிந்தது என்பவே

**40.**

பழம் கொள் தெங்கு இலை எனப் பரந்து பாய் புனல்
வழங்க முன் இயற்றிய சுதை செய் வாய்த் தலை
தழம் குரல் பம்பையில் சாற்றி நாடு எலாம்
முழங்கு தீம் புனல் அகம் முரிய மொய்த்தவே

**41.**

வெலற்கு அரும் குஞ்சரம் வேட்டம் பட்டு எனத்
தலைத் தலை அவர் கதம் தவிர்ப்பத் தாழ்ந்து போய்க்
குலத் தலை மகளிர் தம் கற்பின் கோட்டகம்
நிலைப் படா நிறைந்தன பிறவும் என்பவே

**42.**

கவ்வையும் கடும் புனல் ஒலியும் காப்பவர்
செவ்வன் நூறு ஆயிரம் சிலைக்கும் பம்பையும்
எவ் எலாத் திசைகளும் ஈண்டிக் காரொடு
பவ்வம் நின்று இயம்புவது ஒத்த என்பவே

**43.**

மாமனும் மருகனும் போலும் அன்பின
காமனும் சாமனும் கலந்த காட்சிய
பூமனும் அரிசிப் புல் ஆர்ந்த மோட்டின
தாம் இனம் அமைந்து தம் தொழிலின் மிக்கவே

**44**

நெறி மருப்பு எருமையின் ஒருத்தல் நீள் இனம்
செறி மருப்பு ஏற்று இனம் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறி வரி வராலினம் இரியப் புக்கு உடன்
வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே

**45.**

சேறு அமை செறுவினுள் செந்நெல் வான் முளை
வீறொடு விளைக என‌த் தொழுது வித்துவார்
நாறு இது பதம் எனப் பறித்து நாள் செய்வார்
கூறிய கடைசியர் குழாம் கொண்டு ஏகுவார்

**46.**

முலைத் தடம் சேதகம் பொறிப்ப மற்று அவர்
குலைத்து உடன் பதித்தலின் குதித்த வாள் கயல்
புலத்து இடைக் கவரி கன்று ஊட்டப் போந்த பால்
நிலத்து இடைப் பாய்ந்து அவை பிறழும் நீரவே

**47.**

பால் சுவை அறிந்து அவை பழனத் தாமரை
மேல் செலப் பாய்தலின் வெரீஇய வண்டு இனம்
கோல் தொடி நுளைச்சியர் முத்தம் கோப்பவர்
ஏற்றிய மாலைத் தேன் இரியப் பாய்ந்தவே

**48.**

இரிந்த தேன் குவளையின் நெற்றி தைவர
முரிந்து போது அவிழ்ந்து கொங்கு உயிர்க்கும் முல்லையின்
அரும்பு சேர்ந்து அணி ஞிமிறு ஆர்ப்ப வாய் பதம்
விருந்து எதிர் கொண்ம் எனத் தழுவி வீழ்ந்தவே

**49.**

வள முடி நடுபவர் வரம்பு இல் கம்பலை
இள மழை முழக்கு என மஞ்ஞை ஏங்கலின்
அளமரு குயிலினம் அழுங்கிப் பூம் பொழில்
உளம் மெலி மகளிரின் ஒடுங்கும் என்பவே

**50.**

வளைக் கையால் கடைசியர் மட்டு வாக்கலின்
திளைத்தவர் பருகிய தேறல் தேங்குழிக்
களிப்ப உண்டு இள அனம் கன்னி நாரையைத்

திளைத்தலின் பெடை மயில் தெருட்டும் செம்மற்றே

**51**

கண் எனக் குவளையும் கட்டல் ஓம்பினார்
வண்ண வாள் முகம் என மரையின் உள் புகார்
பண் எழுத்து இயல் படப் பரப்பி இட்டனர்
தண் வயல் உழவர் தம் தன்மை இன்னதே

**52.**

நித்திலப் பந்துடன் ஈன்று பாதிரி
ஒத்த பூ உடற்றிய நாவின் நாகினால்
தத்து நீர் நாரை மேல் எறியத் தண் கடல்
பைத்து எழு திரை எனப் பறவை ஆலுமே

**53.**

சொல் அரும் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கரு இருந்து ஈன்று மேல் அலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்வி சேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

**54.**

மீன் கணின் அளவும் வெற்று இடங்கள் இன்மையால்
தேன் கணக் கரும்பு இயல் காடும் செந் நெலின்
வான் புகழ் களிறு மாய் கழனி ஆக்கமும்
ஊன் கணார்க்கு உரைப்ப அரிது ஒல் என் சும்மைத்தே

**55.**

ஆய் பிழி விருத்து வண்டு அயிற்றி உண்டு தேன்
வாய் பொழி குவளைகள் சூடி மள்ளர்கள்
தேய் பிறை இரும்பு தம் வலக்கை சேர்த்தினர்
ஆய் செந் நெல் அகன்ற காடு அரிகுற்றார்களே

**56**

கிணை நிலைப் பொருநர் தம் செல்லல் கீழ்ப் படப்
பணை நிலையாய் செந்நெல் பகரும் பண்டியும்
கணை நிலைக் கரும்பினில் கவரும் பண்டியும்
மண நிலை மலர் பெய்து மறுகும் பண்டியும்

**57**

வாளையின் இனம் தலை இரிய வண்டு அலர்
தாள் உடைத் தாமரை கிழிய வண் சுமை
கோள் உடை இளையவர் குழாம் கொண்டு ஏகலில்
பாளை வாய் கமுகு இனம் பழங்கள் சிந்துமே

**58.**

சோர் புயல் முகில் தலை விலங்கித் தூ நிலம்
மார்பு கொண்டு ஆர்ந்து அது நரல வண் சுளை
ஆர்புறு பலாப் பழம் அழிந்த நீள் களம்

போர்பினான் மலிந்து உடன் பொலிந்த நீரவே

**59.**

ஈடு சால் போர் பழித்து எருமைப் போத்தினால்
மாடு உறத் தெழித்து வை களைந்து கால் உறீஇச்
சேடு உறக் கூப்பிய செந்நெல் குப்பைகள்
கோடு உயர் கொழும் பொனின் குன்றம் ஒத்தவே

**60.**

கரும்பு கண் உடைப்பவர் ஆலை தோறெலாம்
விரும்பி வந்து அடைந்தவர் பருகி விஞ்சிய
திருந்து சாறு அடுவுழிப் பிறந்த தீம் புகை
பரந்து விண் புகுதலின் பருதி சேந்ததே

**61**

கிணை நிலைப் பொருநர் தம் செல்லல் கீழ்ப் படப்
பணை நிலையாய் செந்நெல் பகரும் பண்டியும்
கணை நிலைக் கரும்பினில் கவரும் பண்டியும்
மண நிலை மலர் பெய்து மறுகும் பண்டியும்

**62.**

மல்லல் அம் தெங்கு இள நீர் பெய் பண்டியும்
மெல் இலைப் பண்டியும் கமுகின் மேதகு
பல் பழுக்காய்க் குலை பெய்த பண்டியும்
ஒல்கு தீம் பண்டம் பெய்து ஒழுகும் பண்டியும்

**63.**

கருங் கடல் வளம் தரக் கரையும் பண்டியும்
நெருங்குபு முதிரையின் நிறைந்த பண்டியும்
பெருங் கலிப் பண்டிகள் பிறவும் செற்றுபு
திருந்தி எத் திசைகளும் செறிந்த என்பவே

**64.**

கிளி வளர் பூ மருது அணிந்து கேடு இலா
வள வயல் வைகலும் இன்னது என்ப தேன்
துளியொடு மதுத் துளி அறாத சோலை சூழ்
ஒளி அமை இருக்கை ஊர் உரைக்க நின்றவே

**65**

சேவல் அன்னம் தாமரையின் தோடு அவிழ்ந்த செவ்விப் பூக்
காவில் கூடு எடுக்கிய கவ்விக் கொண்டு இருந்தன
தாவில் பொன் விளக்கமாத் தண் குயில் முழவமாத்
தூவி மஞ்ஞை நன் மணம் புகுத்தும் தும்பிக் கொம்பரோ

**66.**

கூடினார் கண் அம்மலர்க் குவளை அம் குழி இடை
வாடு வள்ளை மேல் எலாம் வாளை ஏறப் பாய்வன
பாடு சால் கயிற்றில் பாய்ந்து பல் கலன் ஒலிப்பப் போந்து

ஆடு கூத்தி ஆடல் போன்ற நாரை காண்ப ஒத்தவே

**67.**

காவி அன்ன கண்ணினார் கயம் தலைக் குடைதலின்
ஆவி அன்ன பூந் துகில் அணிந்த அல்குல் பல் கலை
கோவை அற்று உதிர்ந்தன கொள்ளும் நீரர் இன்மையின்
வாவி யாவும் பொன் அணிந்து வானம் பூத்தது ஒத்தவே

**68.**

பாசவல் இடிப்பவர் உலக்கை வாழைப் பல் பழம்
ஆசினி வருக்கை மா தடிந்து தேம் கனி உதிர்த்து
ஊசல் ஆடு பைங் கமுகு தெங்கின் ஒண் பழம் பரீஇ
வாசத் தாழை சண்பகத்தின் வான் மலர்கள் நக்குமே

**69.**

மன்றல் நாறு இலஞ்சி மேய்ந்து மா முலை சுரந்த பால்
நின்ற தாரையால் நிலம் நனைப்ப ஏகி நீள் மனைக்
கன்று அருத்தி மங்கையர் கலம் நிறை பொழிதர
நின்ற மேதியால் பொலிந்த நீர மாட மாலையே

**70**

வெள்ளிப் போழ் விலங்க வைத்து அனைய வாய் மணித் தலை
கொள் பவளம் கோத்த அனைய கால குன்றிச் செங்கண
ஒள் அகில் புகை திரண்டது ஒக்கும் மா மணிப் புறாக்
கிள்ளையோடு பால் உணும் கேடு இல் பூவை பாடவே.

## பெரிய புராணம்

– திருநீலகண்ட நாயனார் புராணம்

- சேக்கிழார்

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கிமன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத்தனிக் கூத்து ஆடும்
நாதனார் கழல்கள் வாழ்த்திவழிபடும் நலத்தின் மிக்கார். 1

பொய் கடிந்து அறத்தின் வாழ்வார்புனற் சடை முடியார்க்கு அன்பர்
மெய் அடியார் கட்கு ஆனபணி செயும் விருப்பில் நின்றார்

வையகம் போற்றும் செய்கை மனைஅறம் புரிந்து வாழ்வார்
சைவ மெய்த் திருவின் சார்வேபொருள் எனச் சாரு நீரார். 2

அளவிலா மரபின் வாழ்க்கை மண்கலம் அமுதுக்கு ஆக்கி
வளரிளம் திங்கள் கண்ணி மன்றுளார்அடியார்க்கு என்றும்
உள மகிழ் சிறப்பின் மல்க ஓடுஅளித்து ஒழுகும் நாளில்
இளமை மீது ஊர இன்பத்துறையினில் எளியர் ஆனார். 3

அவர் தம் கண் மனைவியாரும்அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர் பொங்குநஞ்சு உண்ண யாம் செய்
தவ நின்று தடுத்தது என்னத்தகைந்து தான் தரித்தது என்று
சிவன் எந்தை கண்டம் தன்னைத்திரு நீல கண்டம் என்பார். 4

ஆன தம் கேள்வர் அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்தஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடன்உறைவு இசையார் ஆனார்
தேனலர் கமலப் போதில்திருவினும் உருவம் மிக்கார். 5

மூண்ட அப் புலவி தீர்க்கஅன்பனார் முன்பு சென்று
பூண்டயங்கு இளமென் சாயல் பொன்கொடி அனையார்
தம்மை
வேண்டுவ இரந்து கூறிமெய்யுற அணையும் போதில்
தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார். 6

ஆதியார் நீல கண்டத்து அளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்டபெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கிஎம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என் தன்மனத்தினும் தீண்டேன் என்றார். 7

கற்புறு மனைவியாரும் கணவனார்க்குஆன எல்லாம்
பொற்புற மெய் உறாமல்பொருந்துவ போற்றிச் செய்ய
இல் புறம்பு ஒழியாது அங்கண் இருவரும் வேறு வைகி
அன்புறு புணர்ச்சி இன்மைஅயலறியாமை வாழ்ந்தார். 8

இளமையின் மிக்குளார்கள் இருவரும்அறிய நின்ற

அளவில் சீர் ஆணை போற்றிஆண்டுகள் பலவும் செல்ல
வள மலி இளமை நீங்கிவடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்புதம்பிரான் திறத்துச் சாயார். 9

இந் நெறி ஒழுகும் நாளில்எரி தளர்ந்தது என்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் தானுந்தொண்டரை விளக்கங்
காண
நன்னெறி இதுவாம் என்றுஞாலத்தார் விரும்பி உய்யும்
அந் நெறி காட்டும் ஆற்றல்அருள் சிவ யோகி ஆகி. 10

வேறுகீள் ஒடு கோவணம் சாத்திக் கேடு இலா
வாள் விடு நீற்று ஒளி மலர்ந்த மேனி மேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர் திரு முண்ட நெற்றியும். 11

நெடுஞ் சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங் கதிர் முறுவல் வெண்ணிலவும் மேம்பட
இடும் பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்து வேட்கோவர் தம் மனையில் நண்ணினார். 12

நண்ணிய தவச் சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர் தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றி செய்து
எண்ணிய வகையினால்எதிர் கொண்டு ஏத்தினார். 13

பிறை வளர் சடை முடிப்பிரானைத் தொண்டர் என்று
உறை உளில் அணைந்துபேர் உவகை கூர்ந்திட
முறைமையின் வழி பட மொழிந்த பூசைகள்
நிறை பெரு விருப்பொடுசெய்து நின்ற பின். 14

எம்பிரான் யான் செயும்பணி எது என்றனர்
வம்புலா மலர்ச் சடை வள்ளல் தொண்டனார்
உம்பர் நாயகனும் இவ்வோடுநின்பால் வைத்து
நம்பி நீ தருக நாம்வேண்டும் போது என்று. 15

தன்னை ஒப்பு அரியது தலத்துத் தன் உழைத்

துன்னிய யாவையும் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது
இன்ன தன்மையது இது வாங்கு நீ என. 16

தொல்லை வேட்கோவர் தம்குலத்துள் தோன்றிய
மல்கு சீர்த் தொண்டனார்வணங்கி வாங்கிக் கொண்டு
ஒல்லையின் மனையில் ஓர்மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்து வந்துஇறையை எய்தினார். 17

வைத்த பின் மறையவர் ஆகி வந்து அருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்து உடன் போய் விடை கொண்டு மீண்டனர்
அத்தர் தாம் அம்பலம் அணைய மேவினார். 18

வேறுசால நாள் கழிந்த பின்புதலைவனார் தாம் முன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக் குறிஇடத்து அகலப் போக்கிச்
சீலமார் கொள்கை என்றும்திருந்து வேட்கோவர் தம்பால்
வாலி தாம் நிலைமை காட்டமுன்பு போல் மனையில்
வந்தார். 19

வந்த பின் தொண்டனாரும் எதிர்வழி பாடு செய்து
சிந்தை செய்து அருளிற்று எங்கள்செய்தவம் என்று நிற்ப
முந்தை நாள் உன்பால் வைத்தமெய்யொளி விளங்கும் ஓடு
தந்து நில் என்றான் எல்லாம் தான்வைத்து வாங்க
வல்லான். 20

என்றவர் விரைந்து கூறஇருந்தவர் ஈந்த ஓடு
சென்று முன் கொணர்வான் புக்கார்கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்தேடியும் காணார் மாயை
ஒன்றும் அங்கு அறிந்திலார் தாம்உரைப்பது ஒன்று இன்றி
நின்றார். 21

மறையவன் ஆகி நின்றமலைமகள் கேள்வன் தானும்
உறை உளில் புக்கு நின்றஒரு பெருந் தொண்டர் கேட்ப
இறையில் இங்கு எய்தப் புக்காய்தாழ்த்தது என் என்ன வந்து
கறை மறை மிடற்றினானைக் கைதொழுது உரைக்கல்
உற்றார். 22

இழையணி முந்நூல் மார்பின் எந்தைநீர் தந்து போன

**விழை தகும் ஓடு வைத்த வேறுஇடம் தேடிக் காணேன்**
**பழைய மற்று அதனில் நல்லபாத்திரம் தருவன் கொண்டு இப்**
**பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமஎன்று இறைஞ்சி**

**நின்றார். 23**

**சென்னியால் வணங்கி நின்றதொண்டரைச் செயிர்த்து நோக்கி**
**என்னிது மொழிந்தவா நீ யான்வைத்த மண் ஓடு அன்றிப்**
**பொன்னினால் அமைத்துத் தந்தாய்ஆயினுங் கொள்ளேன்**
**போற்ற**
**முன்னை நான் வைத்த ஓடேகொண்டு வா என்றான்**

**முன்னோன். 24**

**கேடு இலாப் பெரியோய்என்பால் வைத்தது கெடுதலாலே**
**நாடியும் காணேன் வேறு நல்லதுஓர் ஓடு சால**
**நீடு செல்வது தான் ஒன்றுதருகின்றேன் எனவும் கொள்ளாது**
**ஊடி நின்று உரைத்தது என் தன்உணர்வு எலாம் ஒழித்தது**
**என்ன. 25**

**ஆவதென் உன்பால் வைத்தஅடைக்கலப் பொருளை வெளவிப்**
**பாவகம் பலவும் செய்து பழிக்குநீ ஒன்றும் நாணாய்**
**யாவரும் காண உன்னை வளைத்துநான் கொண்டே அன்றிப்**
**போவதும் செய்யேன் என்றான்புண்ணியப் பொருளாய்**
**நின்றான். 26**

**வளத்தினால் மிக்க ஓடுவெளவினேன் அல்லேன் ஒல்லை**
**உளத்தினும் களவிலாமைக்கு என்செய்கேன் உரையும் என்ன**
**களத்து நஞ்சு ஒளித்து நின்றான்காதல் உன் மகனைப் பற்றிக்**
**குளத்தினில் மூழ்கிப் போ என்றுஅருளினான் கொடுமை**
**இல்லான். 27**

**ஐயர் நீர் அருளிச் செய்தவண்ணம் யான் செய்வதற்குப்**
**பொய்யில் சீர்ப் புதல்வன் இல்லைஎன் செய்கேன் புகலும்**
**என்ன**
**மையறு சிறப்பின் மிக்கமனையவள் தன்னைப் பற்றி**
**மொய் அலர் வாவி புக்குமூழ்குவாய் என மொழிந்தார். 28**

**வேறுகங்கை நதி கரந்த சடைகரந்து அருளி எதிர் நின்ற**
**வெங் கண் விடையவர்அருள வேட்கோவர் உரைசெய்வார்**

எங்களில் ஓர் சபதத்தால் உடன்மூழ்க இசைவு இல்லை
பொங்கு புனல் யான்மூழ்கித்தருகின்றேன் போதும் என. 29

தந்தது முன் தாராதேகொள்ளாமைக்கு உன் மனைவி
அந் தளிர்ச் செங் கைப்பற்றிஅலை புனலில் மூழ்காதே
சிந்தை வலித்து இருக்கின்றாய்தில்லை வாழ் அந்தணர்கள்
வந்து இருந்த பேர் அவையில்மன்னுவன் யான் எனச்
சென்றார். 30

நல் ஒழுக்கம் தலை நின்றார்நான் மறையின் துறை போனார்
தில்லை வாழ் அந்தணர்கள்வந்து இருந்த திருந்தவையில்
எல்லை இலான் முன் செல்லஇருந்தொண்டர் அவர் தாமும்
மல்கு பெரும் காதலினால்வழக்கு மேலிட்டு அணைந்தார். 31

அந்தணன் ஆம் எந்தை பிரான்அரு மறையோர் முன் பகர்வான்
இந்த வேட்கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்து ஒழியான் கெடுத்தானேல்தன் மனைவி கைப்பற்றி
வந்து மூழ்கியும் தாரான்வலி செய்கின்றான் என்றார். 32

நறை கமழும் சடை முடியும்நாற்றோளும் முக் கண்ணும்
கறை மருவும் திரு மிடரும்கரந்து அருளி எழுந்து அருளும்
மறையவன் இத்திறம் மொழிய மாமறையோர் உரை செய்வார்
நிறையுடைய வேட்கோவர் நீர்மொழியும் புகுந்தது என. 33

நீணிதியாம் இது என்று நின்றஇவர் தரும் ஓடு
பேணி நான் வைத்த இடம்பெயர்ந்து கரந்தது காணேன்
பூண் அணி நூல் மணி மார்பீர்புகுந்த பரிசு இது என்று
சேணிடையும் தீங்கு அடையாத்தொண்டர் உரைசெய்தார். 34

வேறுதிருவுடை அந்தணாளர் செப்புவார்திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர் தாம் வைத்தஓட்டினைக் கெடுத்தீர் ஆனால்
தருமிவர் குளத்தில் மூழ்கித் தருகஎன்று உரைத்தார் ஆகில்
மருவிய மனைவியொடு மூழ்குதல்வழக்கே என்றார். 35

அருந் தவத் தொண்டர் தாமும்அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவியாரைத் தீண்டாமைசெப்ப மாட்டார்
பொருந்திய வகையால் மூழ்கித்தருகின்றேன் போதும் என்று

பெருந் தவ முனிவரோடும் பெயர்ந்துதம் மனையைச்
சார்ந்தார். 36

மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகியார் முன்
சினவிடைப் பாகர் மேவும்திருப்புலீச் சுரத்து முன்னர்
நனை மலர்ச் சோலை வாவிநண்ணித் தம் உண்மை காப்பார்
புனை மணி வேணுத் தண்டின்இரு தலை பிடித்துப் புக்கார். 37

தண்டிரு தலையும் பற்றிப் புகும்அவர் தம்மை நோக்கி
வெண் திரு நீற்று முண்டவேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டு உடன் மூழ்கீர் என்னக்கூடாமை பாரோர் கேட்கப்
பண்டு தம் செய்கை சொல்லிமூழ்கினார் பழுது இலாதார். 38

வாவியின் மூழ்கி ஏறும்கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கிவிருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும்சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின் மா மழையின் மீளமூழ்குவார் போன்று தோன்ற. 39

அந்நிலை அவரைக் காணும்அதிசயம் கண்டார் எல்லாம்
முன்நிலை நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லை
இந்நிலை இருந்த வண்ணம் என்என மருண்டு நின்றார்
துன்னிய விசும்பின் ஊடு துணையுடன்விடை மேல்
கண்டார். 40

கண்டனர் கைகளாரத் தொழுதனர்கலந்த காதல்
அண்டரும் ஏத்தினார்கள் அன்பர்தம்பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவியாரும் தொழுதுஉடன் போற்றி
நின்றார். 41

மன்றுளே திருக் கூத்து ஆடிஅடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும்தேவர்கள் தேவர் தாமும்
வென்ற ஐம் புலனால் மிக்கீர்விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ் இளமை நீங்காதுஎன்று எழுந்து
அருளினாரே.

42

விறலுடைத் தொண்டனாரும் வெண்ணகைச்செவ்வாய் மென்
தோள்

அறல் இயல் கூந்தல் ஆளாம்மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்துசிவலோகம் அதனை எய்திப்
பெறல் அரும் இளமை பெற்றுப்பேர் இன்பம் உற்றார்
அன்றே.
43

அயல் அறியாத வண்ணம்அண்ணலார் ஆணை உய்த்த
மயலில் சீர்த் தொண்டனாரையான் அறிவகையால் வாழ்த்திப்
புயல் வளர் மாடம் நீடும்பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல் இயற் பகையார் செய்ததிருத் தொண்டு செப்பல்
உற்றேன்.44

## கம்பராமாயணம்

–கங்கைப் படலம்

-கம்பர்

### இராமன் சீதை இலக்குவனோடு காட்டில் செல்லல்

வெய்யோன் ஒளி தன்மேனியில் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்,
போனான்-
"மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ,
ஐயோ, இவன் வடிவு!" என்பதோர் அழியா அழகு உடையான்.
1

### சீதையுடன் செல்லும் இராமன் மருத நிலத்தில் திரியும் அன்னம் முதலியவற்றைக் காணுதல்

அளி அன்னது ஓர் அறல் துன்னிய குழலாள், கடல் அமிழ்தின்
தெளிவு அன்னது ஓர் மொழியாள், நிறை தவம் அன்னது ஓர்

செயலாள்,

வெளி அன்னது ஓர் இடையாளொடும் விடை அன்னது ஓர் நடையான்
களி அன்னமும் மட அன்னமும் நடம் ஆடுவ கண்டான். 2

அஞ்சு அம்பையும் ஐயன் தனது அலகு அம்பையும் அளவா,
நஞ்சங்களை வெல ஆகிய நயனங்களை உடையான்,
துஞ்சும்களி வரி வண்டுகள் குழலின் படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன் கழல் நகுகின்றது கண்டாள். 3

மா கந்தமும், மகரந்தமும், அளகம்தரும் மதியின்
பாகம் தரும் நுதலாளொடு, பவளந்தரும் இதழான்,
மேகந்தனி வருகின்றது மின்னோடு என, மிளிர்பூண்,
நாகம் நனி வருகின்றது பிடியோடு என, நடவா, 4

தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச் சுவை அமுதின்,
கிளைகட்டிய கருவிக்கிளர், இசையின், பசை நறவின்,
விளைகட்டியின், மதுரித்துஎழு கிளவிக் கிளி விழிபோல்,
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான். 5

### மூவரும் மருத நிலக் காட்சிகளை கண்ட வண்ணம் கோசல நாட்டைக் கடத்தல்

'அருப்பேந்திய கலசத்துணை, அமுதேந்திய மதமா
மருப்பேந்திய' எனலாம் முலை, மழையேந்திய குழலாள்,
கருப்பு ஏந்திரம் முதலாயின கண்டாள், இடர் காணாள்,
பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள், போனாள். 6

பல் நந்து உகு தரளம் தொகு படர் பந்திகள் படு நீர்
அன்னந்துயில் வதி தண்டலை, அயல்நந்து உளை புளினம்,
சின்னம் தரும் மலர்சிந்திய செறிநந்தன வனம் நல்
பொன் நந்திய நதி, கண்டு உளம் மகிழ்தந்தனர் போனார். 7

கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன, கடைவாய்ப்
பால்பாய்வன; நறைபாய்வன மலர்வாய் அளி படரச்
சேல்பாய்வன; கயல்பாய்வன; செங்கால்மட அன்னம்
போல், பாய்புனல் மடவார்படி நெடு நாடு அவை போனார். 8

### மூவரும் கங்கையை அடைதல்

பரிதி பற்றிய பல்கலன் முற்றினர்,
மருத வைப்பின் வளங்கெழு நாடு ஒரீஇ,
சுருதி கற்று உயர் தோம் இலர் சுற்றுறும்
விரிதி ரைப்புனல் கங்கையை மேவினார். 9

### கங்கைக் கரையில் தங்கியிருக்கும் முனிவர்கள் இராமனைக் காண வருதல்

கங்கை என்னும் கடவுள் திருநதி
தங்கி வைகும் தபோதனர் யாவரும்,
'எங்கள் செல்கதி வந்தது' என்று ஏமுறா,
அங்கண் நாயகன் காண, வந்து அண்மினார். 10

### வந்த முனிவர்களை இராமன் தரிசித்து மகிழ்தல்

பெண்ணின் நோக்கும் சுவையில், பிறர்பிறர்க்கு
எண்ணி நோக்கி இயம்ப அரும் இன்பத்தை,
பண்ணின் நோக்கும் பராஅமு தைப்பசுங்
கண்ணின் நோக்கினர், உள்ளங் களிக்கின்றார். 11

### முனிவர்கள் இராமனை புகழ்ந்து பாடி ஆடுதல்

எதிர்கொடு ஏத்தினர்; இன்னிசை பாடினர்;
வெதிர்கொள் கோலினர், ஆடினர்; வீரனைக்
கதிர்கொள் தாமரைக் கண்ணனைக் கண்ணினால்,

**மதுர வாரி அமுதென, மாந்துவார். 12**

**முனிவர்கள் இராமனைத் தம் இருப்பிடம் அழைத்துச் செல்லுதல்**

**மனையின் நீங்கிய மக்களை வைகலும்**
**நினையும் நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்,**
**அனையர் வந்துற, ஆண்டு எதிர்ந்தார்கள்போல்,**
**இனிய மாதவப் பள்ளிகொண்டு எய்தினார். 13**

**இராமன் வழி வந்த வருத்தத்தை முனிவர்கள் போக்குதல்**

**பொழியும் கண்ணீர் புதுப்புனல் ஆட்டினர்;**
**மொழியும் இன்சொலின், மொய்ம்மலர் சூட்டினர்;**
**அழிவில் அன்பெனும் ஆரமிழ்து ஊட்டினர்;**
**வழியில் வந்த வருத்தத்தை வீட்டினர். 14**

**இராமனை நீராடி அமுது உண்ண முனிவர்கள் வேண்டல்**

**காயும், கானிற் கிழங்கும், கனிகளும்,**
**தூய தேடிக் கொணர்ந்தனர்; 'தோன்றல்! நீ**
**ஆய கங்கை அரும்புனல் ஆடினை,**
**தீயை ஓம்பினை, செய்யமுது' என்றனர். 15**

**இராமனும் சீதையும் கங்கையில் நீராடுதல்**

**மங்கையர்க்கு விளக்கன்ன மானையும்,**
**செங்கை பற்றினன், தேவரும் துன்பு அற,**
**பங்கயத்து அயன், பண்டு, தன் பாதத்தின்**
**அம் கையின் தரும் கங்கையின் ஆடினான். 16**

**இராமனை கங்கை புகழ்தல்**

கன்னி நீக்க அரும் கங்கையும் கைதொழாப்
'பன்னி நீக்க அரும் பாதகம், பாருளோர்,
என்னின் நீக்குவர்; யானும், இன்று என் தந்த
உன்னின் நீக்கினென்; உய்ந்தனென் யான்' என்றாள். 17

கங்கையில் மூழ்கும் இராமனின் தோற்றம்

வெம் கண் நாகக் கரத்தினன், வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன், கற்புடை
மங்கை காணநின்றாடுகின்றான், வகிர்த்
திங்கள் சூடிய செல்வனின் தோன்றினான். 18

தள்ளும் நீர்ப்பெருங் கங்கைத் தரங்கத்தால்,
வள்ளி நுண்ணிடை மாமல ராளொடும்,
வெள்ளி வெண் நிறப் பாற்கடல், மேலைநாள்
பள்ளி நீங்கிய பான்மையின், தோன்றினான். 19

சீதை கங்கையில் நீராடுதல்

வஞ்சி நாண இடைக்கு, மடநடைக்கு
அஞ்சி அன்னம் ஒதுங்க, அடியன்ன
கஞ்சம் நீரில் ஒளிப்பக் கயலுகப்
பஞ்சி மெல்லடிப் பாவையும் ஆடினாள். 20

சீதை நீராடியதால் கங்கை நறுமணம் பெறுதல்

தேவ தேவன் செறிசடைக் கற்றையுள்
கோவை மாலை எருக்கொடு கொன்றையின்
பூவு நாறலள்; பூங்குழல் கூந்தலின்
நாவி நாள்மலர் கங்கையும் நாறினாள். 21

### கங்கையின் அலைகள் சீதை மீது மோதுதல்

நுரைக் கொழுந்து எழுந்து ஓங்கி நுடங்கலால்
நரைத்த கூந்தலின் நங்கை மந்தாகினி,
உரைத்த சீதை தனிமையை உன்னுவாள்,
திரைக்கை நீட்டிச் செவிலியின் ஆட்டினாள். 22

### சீதையின் கூந்தல் கங்கை வெள்ளத்தில் தோன்றும் காட்சி

மங்கை வார்குழல் கற்றை மழைக்குலம்,
தங்கு நீரிடைத் தாழ்ந்து குழைப்பன,
கங்கை யாற்றுடன் ஓடும் கரியவள்
பொங்கு நீர்ச்சுழி போவன போன்றதே. 23

### சீதை புனித கங்கையில் மூழ்கி எழுதல்

சுழிபட்டு ஓங்கிய தூங்குஒலி ஆற்றுத்தன்
விழியில் சேலுகள் வானிற வெள்ளத்து,
முழுகித் தோன்றுகின்றாள், முதற் பாற்கடல்
அழுவத்து அன்று எழுவாள் எனல் ஆயினாள். 24

### இராமன் நீராடியதால் கங்கையின் மகிமை மிகுதல்

செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்,
வெய்ய பாதகம் தீர்த்து விளங்குவாள்
ஐயன் மேனி எலாம் அளைந்தாள், இனி,
வையம் மா நரகத்திடை வைகுமோ? 25

### இராமன் கடன் முடித்து முனிவரின் நல்விருந்து உண்ணுதல்

துறை நறும்புனல் ஆடிச் சுருதியோர்
உறையுள் எய்தி, உணர்வு உடையோர் உணர்
இறைவன் கைதொழுது, ஏந்துஎரி ஓம்பிப்பின்
அறிஞர் காதற்கு அமைவிருந்து ஆயினான். 26

முனிவர் கொடுத்த விருந்தால் இராமன் மகிழ்தல்

வருந்தித் தான் தர வந்த அமுதையும்,
'அருந்தும் நீர்' என்று அமரரை, ஊட்டினான்,
விருந்து மெல்லடகு உண்டு விளங்கினான்-
திருந்தினார் வயிற் செய்தன தேயுமோ? 27

தேம்பாவணி
மீட்சிப் படலம்

ஏழ்பட வருடம் இவ்வாறு இயல் பட ஒழுகிற்று ஆகி
போழ் பட கல்லும் செம் தீ புழுங்கிய வனம் போல் பாவத்து
ஆழ் பட அழன்ற அ நாடு ஆரண அருவி பாய
கேழ் பட மலர்ந்த சோலை கிழமையின் எழுவிற்று அன்றோ

தீவிற்று ஆய் அலைந்த முந்நீர் திரையினுள் அலைவு இலாதான்
ஓவிற்று ஆய் ஓவல் செய்தார்க்கு உளத்து நைந்து அருளின் பேணி
கா இற்றாய் எவர்க்கும் நீழல் காத்த மா முனிவன் தானே
ஆவிற்று ஆய் தெய்வ மைந்தன் அருள் நிழற்கு ஒடுங்கி வாழ்வான்

உள் உற விண்ணோர்க்கு ஆற்றா உயர் அருள் கடல் ஆம் மைந்தன்
தெள் உற அகன்ற மார்பில் சித முடி தாயும் தானும்
அள் உற அன்பின் மூழ்கி ஆங்கு அவர் அருந்து ஞானம்
எள் உற எஞ்சும் என் சொல் இயம்பிட துணியும்-காலை

கூர்த்து உராய் உவப்பின் மூழ்கி கொழுந்தவன் உண்ட ஞானம்
போர்த்து உராய் உமிழ்வதே போல் பெரும் பயன் எவர்க்கும் ஆக
சீர்த்து உராய் நாட்கள்-தோறும் தே மொழி வாயால் கூற
நீர்த்து உராய் எழீஇய அ நாடு நிகர்_இல கேழ்த்தது அம்மா

வினை பகை ஒழிந்த யாரும் மெய் மறை விளைவு காண
எனை பகல்-தோறும் வீயா இன்பம் உற்று உவந்த போழ்தில்
சுனை பகை கோடை முற்றி துதைந்த பைம் கூழ் காய்ந்து அன்ன
முனை பகை தன்மைத்து அன்னார் முரிய உற்றது சொல்வாம்-ஆல்

வான் இருந்து எவனும் ஆள்வோன் வளனிடத்து ஏவுகின்ற
தேன் இருந்து அலர் சொல் வானோன் திருமகன் கொல்ல ஓர்ந்தான்
தான் இருந்து ஒழிந்தான் ஈண்டே தாயொடு மகவும் கூட்டி
கான் இருந்து அலர் கோலோய் முன் கடிந்த நாடு அடைதி என்றான்

பணி மொழி பணிந்து தாயும் பாலனும் உறையுள் சென்று
மணி மொழி தேவ தூது வகுத்தவை வளனே கூற
அணி மொழி இளவல் நன்று என்று அயனம் ஓர்ந்து எவர்க்கும் கூறா
துணி மொழி உறுதியாக சொல்லினான் மது பெய் கோலான்

வரை என துயரில் போல்-மின் வாருதி நாடி ஓடும்
திரை என இறைவன் சேர்-மின் தீ என அகல்-மின் தீய
நுரை என வாழ்க்கை காண்-மின் நோய் என உயிரை கா-மின்
கரை என கதியை வெஃகு-மின் கசடு அறு நெறி இது என்றான்

பண் தீண்டில் ஏங்குதல் போல் அன்பும் பூசல் பரவும் எனா
கண் தீண்டி மருட்டிய கார் இரவின் நாப்பண் கரந்தது போல்
விண் தீண்டி ஆடு கொடி மாட நல் ஊர் விட்டு அகன்று
புண் தீண்டி ஆற்றும் மருந்து ஒத்த நீரார் போதல் உற்றார்

நதி தள்ளி நீந்து அறியா சுழி பட்டார் போல் நைந்து எசித்தார்
பதி தள்ளி போவது அறிந்து அயர்வார் என்று உள் பரிந்து இரங்கி
கதி தள்ளி நடு நிற்பார் கயவர் என பின் தேறி வளன்
மதி தள்ளி இடும் அன்பின் பகை நன்று என்றே வழி நடந்தான்

ஊர் ஆழி அகன்று இவர் போம் துயர் தீ பட்டு என்று உரு சிவப்ப
நீர் ஆழி அகன்று இரவி தோன்றி மூவர் நீங்கினர் என்று
ஈர் ஆழி உள் கவிழ்ந்த கலம் ஒத்து அந்தோ என்று அலறி
பேர் ஆழி ஒத்த நகர் புலம்பும் ஓதை பெரிது அன்றோ

பொய் மறுத்தீர் புரை மறுத்தீர் மொய்த்த கொன் நூல் புகைந்து உளம் கொள்
மை மறுத்தீர் மறை உரைத்தீர் பிள்ளையை தாய் மறுத்து என்ன
கை மறுத்தீர் போய் ஒளித்தீர் அந்தோ என்ன கை மறுத்து
மெய் மறுத்து ஈர் துயர் ஆற்றாது உயிர் நீத்து அன்ன மெய் மறந்தார்

இன்று ஒளித்த சுடரொடு மு சுடராம் நீவிர் இரா இருள்-கண்
நின்று ஒளித்த திறம் என்னோ எம்-கண் தீதின் நிலை தானோ
குன்று ஒளித்த மணி ஒத்தீர் அந்தோ என்ன குழைந்து அலறி
கன்று ஒளித்த கறவை அனார் உளைந்து விம்மி கலுழ்கின்றார்

வரை நாட்டி நீர் கடைந்து ஆங்கு அமுதும் நஞ்சும் வந்தன என்று
உரை நாட்டி உண்டு என முன் கதையில் கேட்டேம் ஒண் தவம் செய்
கரை நாட்டி அற கடலாம் இவர்-தம் அன்பின் கனிவு உண்டாய்
விரை நாட்டில் அகன்று இடரால் உண்டாம் நஞ்சின் விளைவு என்பார்

கான் சுரக்கும் இள முல்லை நட்டு பொன்னால் கடை கோலி
வான் சுரக்கும் பனி மாலை பந்தர் முத்த மணல் பாய்த்தி
தேன் சுரக்கும் நீர் ஊட்டி வளர்த்த பூங்கா தீய்ந்து அறவோ
மீன் சுரக்கும் இரா ஒளித்து போதீர் நம்மை விட்டு என்பார்

தாள் எழுந்த கஞ்சம் எஞ்ச கதிர் போய் நாளை தான் உவப்ப
கோள் எழுந்த தேர் எழுமே நீ போய் நெஞ்சும் குடைந்து அழுந்தும்
வாள் எழுந்த புழை புழுங்கும் பெரும் புண் ஆறி மகிழ்வதற்கு எ
நாள் எழுந்த நுமை காண கடவேம் அந்தோ நாம் என்பார்

அன்பு உகுக்கும் கண்ணீரே அன்பிற்கு ஆற்றா பெரும் தளை என்று
இன்பு உகுக்கும் ஓர் இரு செல் கூறாது அந்தோ இராவு ஒளித்தீர்
துன்பு உகுக்கும் கான் துறும் கால் துணை இல் மஞ்ஞை துயர் கண்டு
நன்பு உகுக்கும் நெஞ்சு உருகி இரங்கீர்-கொல்லோ நமக்கு என்பார்

கூண்டு உண்டாம் குஞ்சு அகலாது ஓம்பும் பல் புள் குலமும் கார்
கீண்டு உண்டாம் இடிக்கு அஞ்சும் பிடியை தாங்கும் கெழும் கரியும்
ஆண்டு உண்டாம் கான் துறுங்கால் காண்பீர் காண்கில் ஆதரவு அற்று
ஈண்டு உண்டாம் நமை நினை-மின் என்பார் ஆஅ தகாது என்பார்

சீல நீர் கரு முகில்கள் மின்னி ஆர்த்து செய் அரவும்
நீல நீர் கடல் அரவும் எஞ்ச எஞ்சி நெடிது அழுதார்
சால் நீர் கடல் மடையை திறந்தால் போல தணந்தாரை
கோல நீர் கடலாம் அ நகர் நீத்து ஈட்டம் கொடு தொடர்ந்தார்

தேன் ஆர் தெளி ஆர் திரு ஆர் மொழியார்
போனார் உயிர் பின் உடல் போவது என
கான் ஆர் வழி போவம் என கடலும்
வான் ஆர் கனமும் கலி மங்குவன

மிக்கார் துயர் கண்டு அன மேன்மை இலார்
நக்கார் என முல்லைகள் நக்கு அலர
புக்கார் பொழில் தோகை மயில் புடையில்
தொக்கார் அனை அ துயர் ஆலுவன

பயில் உண்ட நரம்பு இளகும் பரிசின்
மயிலும் அகவ சிறை வண்டும் அழ
அயிலும் துயர் ஆய்ந்து தகாதது என
குயிலும் குயில்கின்று குரங்குவன

மயில்காள் அளிகாள் வரிகாள் சிவல்காள்
குயில்காள் கிளிகாள் கொடிகாள் உரையீர்
எயில் காள வனத்து இணை எஞ்ச நல்லோர்
வெயில் காளம் மறைந்து என மேவு இடமே
வரை ஈர் புனலே மழை ஈர் வரையே
விரை ஈரம் அறா விரி பூம் தடமே
சுரை ஈர மலர் தொடை சூழ் பொழிலே
உரையீர் உயிரின் உயிர் உள் உழியே

உருள் தேர் வழி ஒண் கொடி ஆடும் என
மருள் தேர் வழி அற்று மனம் தளர
அருள் தேர் வழி ஆயினரை எவணும்
பொருள் தேர் வழி தேடினர் போல் துறுவார்.

## நான்காம் பருவம்
## செய்யுள் திரட்டு
## எட்டுத்தொகை
## நற்றிணை

### 9

அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண் கண்டாஅங்கு,
அலமரல் வருத்தம் தீர, யாழ நின்
நல மென் பணைத்தோள் எய்தினம் ஆகலின்,
பொரிப் பூம் புன்கின் எழில் தகை ஒண் முறி
சுணங்கு அணி வன முலை அணங்கு கொளத் திமிரி,
நிழல் காண்தோறும் நெடிய வைகி,
மணல் காண்தோறும் வண்டல் தைஇ,

வருந்தாது ஏகுமதி வால் எயிற்றோயே,
மா நனை கொழுதி மகிழ் குயில் ஆலும்.

## 14

தொல் கவின் தொலைய, தோள் நலம்சாஅய,
நல்கார் நீத்தனர்ஆயினும், நல்குவர்;
நட்டனர், வாழி!-தோழி!-குட்டுவன்
அகப்பா அழிய நூறி, செம்பியன்
பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது
அலர் எழச் சென்றனர் ஆயினும்-மலர் கவிழ்ந்து
மா மடல் அவிழ்ந்த காந்தள்அம் சாரல்,
இனம் சால் வயக் களிறு பாந்தட் பட்டென,
துஞ்சாத் துயரத்து அஞ்சு பிடிப் பூசல்
நெடு வரை விடரகத்து இயம்பும்
கடு மான் புல்லிய காடு இறந்தோரே.
பருவரல் நெஞ்சமொடு பல் படர் அகல
வருவர், வாழி தோழி, மூவன்

## 18

பருவரல் நெஞ்சமொடு பல் படர் அகல
வருவர், வாழி தோழி, மூவன்
முழு வலி முள் எயிறு அழுத்திய கதவின்
கானல் அம் தொண்டிப் பொருநன், வென் வேல்
தெறல் அருந்தானைப் பொறையன் பாசறை
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரை தபு கடலின் இனிது கண்படுப்ப
கடாஅம் கழீஇய கதன் அடங்கு யானைத்
தடாஅ நிலை ஒரு கோட்டன்ன
ஒன்று இலங்கு அருவிய குன்று இறந்தோரே.

### 16. பாலை

உள்ளார்கொல்லோ-தோழி! கள்வர்
பொன் புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர் நுதி புரட்டும் ஓசை போல,
செங் காற் பல்லி தன் துணை பயிரும்
அம் காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?

### 17. குறிஞ்சி

மா என மடலும் ஊர்ப; பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப-காமம் காழ்க்கொளினே.

### 19. மருதம்

எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூ இல் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழியர்-நெஞ்சே!-மனை மரத்து
எல்லுறும் மௌவல் நாறும்
பல் இருங் கூந்தல் யாரளோ நமக்கே?

### 20. பாலை

அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து,
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக!
மடவம் ஆக, மடந்தை, நாமே!

### 25. குறிஞ்சி

யாரும் இல்லை; தானே கள்வன்;

தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?

தினை தாள் அன்ன சிறு பசுங் கால

ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்

குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே.

### 29. குறிஞ்சி

நல் உரை இகந்து, புல் உரை தாஅய்,

பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல

உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,

அரிது அவாவுற்றனை-நெஞ்சே!-நன்றும்

பெரிதால் அம்ம நின் பூசல், உயர் கோட்டு

மகவுடை மந்தி போல

அகன் உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

### 38. குறிஞ்சி

கான மஞ்ஞை அறை ஈன் முட்டை

வெயில் ஆடு முசுவின் குருளை உருட்டும்

குன்ற நாடன் கேண்மை என்றும்

நன்றுமன் வாழி-தோழி!-உண்கண்

நீரொடு ஓராங்குத் தணப்ப,

உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே.

### 341. நெய்தல்

பல் வீ படரிய பசு நனை குரவம்

பொரிப் பூம் புன்கொடு பொழில் அணிக் கொளாஅச்

சினை இனிது ஆகிய காலையும், காதலர்

பேணார் ஆயினும், "பெரியோர் நெஞ்சத்துக்

கண்ணிய ஆண்மை கடவது அன்று" என,

வலியா நெஞ்சம் வலிப்ப,

வாழ்வேன்-தோழி!-என் வன்கணானே.

## 38.தோழி கூற்று

இமைய வில் வாங்கிய ஈர்ஞ் சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக,
ஐ இரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக் கையின் கீழ் புகுத்து, அம் மலை
எடுக்கல்செல்லாது உழப்பவன் போல
உறு புலி உரு ஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு, அதன் முதல் குத்திய மத யானை
நீடு இரு விடர் அகம் சிலம்பக் கூய், தன்
கோடு புய்க்கல்லாது, உழக்கும் நாட! கேள்:
ஆர் இடை என்னாய் நீ அரவு அஞ்சாய் வந்தக்கால்,
நீர் அற்ற புலமே போல் புல்லென்றாள், வைகறை,
கார் பெற்ற புலமே போல், கவின் பெறும்; அக் கவின்
தீராமல் காப்பது ஓர் திறன் உண்டேல், உரைத்தைக்காண்
இருள் இடை என்னாய் நீ இரவு அஞ்சாய் வந்தக்கால்,
பொருளில்லான் இளமை போல் புல்லென்றாள், வைகறை,
அருள் வல்லான் ஆக்கம் போல் அணி பெறும்; அவ் அணி
தெருளாமல் காப்பது ஓர் திறன் உண்டேல், உரைத்தைக்காண்
மறம் திருந்தார் என்னாய் நீ மலையிடை வந்தக்கால்,
அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள், வைகறை,
திறம் சேர்ந்தான் ஆக்கம் போல் திருத்தகும்; அத் திருப்

புறங்கூற்றுத் தீர்ப்பது ஓர் பொருள் உண்டேல்,
உரைத்தைக்காண்
என ஆங்கு,
நின் உறு விழுமம் கூறக் கேட்டு,
வருமே, தோழி! நல் மலை நாடன்
வேங்கை விரிவு இடம் நோக்கி,
வீங்கு இறைப் பணைத் தோள் வரைந்தனன் கொளற்கே

**51தலைவி கூற்று**

சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரி பந்து கொண்டு ஓடி,
நோ தக்க செய்யும் சிறு, பட்டி, மேல் ஓர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!
உண்ணு நீர் வேட்டேன்' என வந்தாற்கு, அன்னை,
'அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!
உண்ணு நீர் ஊட்டி வா' என்றாள்: என, யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு,
'அன்னாய்! இவனொருவன் செய்தது காண்' என்றேனா,
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,
'உண்ணு நீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டம்
செய்தான், அக் கள்வன் மகன்

**அகநானூறு**

**14**

"அரக்கத்து அன்ன செந் நிலப் பெரு வழி,
காயாஞ் செம்மல் தாஅய், பல உடன்
ஈயல் மூதாய் வரிப்ப, பவளமொடு
மணி மிடைந்தன்ன குன்றம் கவைஇய
அம் காட்டு ஆர் இடை, மடப் பிணை தழீஇ,
திரி மருப்பு இரலை புல் அருந்து உகள,
முல்லை வியன் புலம் பரப்பி, கோவலர்
குறும் பொறை மருங்கின் நறும் பூ அயர,
பதவு மேயல் அருந்து மதவு நடை நல் ஆன்
வீங்கு மாண் செருத்தல், தீம் பால் பிலிற்ற,
கன்று பயிர் குரல, மன்று நிறை புகுதரும்
மாலையும் உள்ளார்ஆயின், காலை
யாங்கு ஆகுவம்கொல்? பாண!" என்ற
மனையோள் சொல் எதிர் சொல்லல்செல்லேன்,
செவ்வழி நல் யாழ் இசையினென், பையென,
கடவுள் வாழ்த்தி, பையுள் மெய்ந் நிறுத்து,
அவர் திறம் செல்வேன் கண்டனென், யானே
விடு விசைக் குதிரை விலங்கு பரி முடுக,
கல் பொருது இரங்கும் பல் ஆர் நேமிக்
கார் மழை முழக்கு இசை கடுக்கும்,
முனை நல் ஊரன், புனை நெடுந் தேரே.

**33.**

வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி,

"மனை மாண் கற்பின் வாணுதல் ஒழிய,
கவை முறி இழந்த செந் நிலை யாஅத்து
ஒன்று ஓங்கு உயர் சினை இருந்த, வன் பறை,
வீளைப் பருந்தின் கோள் வல் சேவல்
வளை வாய்ப் பேடை வரு திறம் பயிரும்
இளி தேர் தீம் குரல் இசைக்கும் அத்தம்
செலவு அருங்குரைய என்னாது, சென்று, அவள்
மலர் பாடு ஆன்ற, மை எழில், மழைக் கண்
தெளியா நோக்கம் உள்ளினை, உளி வாய்
வெம் பரல் அதர குன்று பல நீந்தி,
யாமே எமியம் ஆக, நீயே
ஒழியச் சூழ்ந்தனைஆயின் முனாஅது
வெல் போர் வானவன் கொல்லி மீமிசை,
நுணங்கு அமை புரையும் வணங்கு இறைப் பணைத் தோள்,
வரி அணி அல்குல், வால் எயிற்றோள்வயின்
பிரியாய்ஆயின் நன்றுமன் தில்ல.
அன்று நம் அறியாய்ஆயினும், இன்று நம்
செய்வினை ஆற்றுற விலங்கின்,
எய்துவைஅல்லையோ, பிறர் நகு பொருளே?

## 55

காய்ந்து செலற் கனலி கல் பகத் தெறுதலின்,
ஈந்து குருகு உருகும் என்றூழ் நீள் இடை,
உளி முக வெம் பரல் அடி வருத்துறாலின்,
விளி முறை அறியா வேய் கரி கானம்,
வயக் களிற்று அன்ன காளையொடு என் மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோஇலெனே! ஒழிந்து யாம்
ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து, அசைஇ,
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு

கண்படை பெறேன், கனவ ஒண் படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழி கள மருங்கின் வாள் வடக்கிருந்தென,
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்,
பெரும்பிறிது ஆகியாங்கு பிரிந்து இவண்
காதல் வேண்டி, எற் துறந்து
போதல்செல்லா என் உயிரொடு புலந்தே.

முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த
வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்
வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,
நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்
போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ் சுரம்
துணிந்து, பிறள் ஆயினள்ஆயினும், அணிந்து அணிந்து,
ஆர்வ நெஞ்சமொடு ஆய் நலன் அளைஇ, தன்
மார்பு துணையாகத் துயிற்றுகதில்ல
துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந் தேர்க் காரி கொடுங்கால் முன்துறை,
பெண்ணை அம் பேரியாற்று நுண் அறல் கடுக்கும்
நெறி இருங் கதுப்பின் என் பேதைக்கு,
அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே!

**புறநானூறு**

## 37

நஞ்சுடை வால் எயிற்று, ஐந் தலை சுமந்த,
வேக வெந் திறல், நாகம் புக்கென,
விசும்பு தீப் பிறப்பத் திருகி, பசுங் கொடிப்
பெரு மலை விடரகத்து உரும் எறிந்தாங்கு,
புள் உறு புன்கண் தீர்த்த, வெள் வேல்,
சினம் கெழு தானை, செம்பியன் மருக!
கராஅம் கலித்த குண்டு கண் அகழி,
இடம் கருங் குட்டத்து உடன் தொக்கு ஓடி,
யாமம் கொள்பவர் சுடர் நிழல் கதூஉம்
கடு முரண் முதலைய நெடு நீர் இலஞ்சி,
செம்பு உறழ் புரிசை, செம்மல் மூதூர்,
வம்பு அணி யானை வேந்து அகத்து உண்மையின்,
'நல்ல' என்னாது, சிதைத்தல்
வல்லையால், நெடுந்தகை! செருவத்தானே.

## 86

சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள் னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல

வீன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

**112**

அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்,
எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்,
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!

## பரிபாடல்

### 5. செவ்வேள்

பாய் இரும் பனிக் கடல் பார் துகள் படப் புக்கு,
சேய் உயர் பிணிமுகம் ஊர்ந்து, அமர் உழக்கி,
தீ அழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து,
நோயுடை நுடங்கு சூர் மா முதல் தடிந்து.
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்று உணல் அஞ்சாக் கொடு வினைக் கொல் தகை
மாய அவுணர் மருங்கு அறத் தபுத்த வேல்,
நாவல்அம் தண் பொழில் வட பொழில் ஆயிடை,
குருகொடு பெயர் பெற்ற மால் வரை உடைத்து,
மலை ஆற்றுப் படுத்த மூ இரு கயந்தலை!
"மூ இரு கயந்தலை, முந் நான்கு முழவுத் தோள்,
ஞாயிற்று ஏர் நிறத் தகை! நளினத்துப் பிறவியை!
காஅய் கடவுட் சேஎய்! செவ்வேள்!

சால்வ! தலைவ!" எனப் பேஎ விழவினுள்,
வேலன் ஏத்தும் வெறியும் உளவே;
அவை வாயும் அல்ல, பொய்யும் அல்ல,
நீயே வரம்பிற்று இவ் உலகம் ஆதலின்;
சிறப்போய் சிறப்பு இன்றிப் பெயர்குவை;
சிறப்பினுள் உயர்வு ஆகலும்,
பிறப்பினுள் இழிபு ஆகலும்,
ஏனோர் நின் வலத்தினதே;
ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ,
வேத மா பூண் வையத் தேர் ஊர்ந்து,
நாகம் நாணா, மலை வில்லாக,
மூவகை ஆர் எயில் ஓர் அழல் அம்பின் முளிய,
மாதிரம் அழல, எய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங் கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காம வதுவையுள்,
அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி
இமையா நாட்டத்து ஒரு வரம் கொண்டு,
"விலங்கு" என, வீண்ணோர் வேள்வி முதல்வன்
விரி கதிர் மணிப் பூணவற்குத் தான் ஈத்தது
அரிது என மாற்றான், வாய்மையன் ஆதலின்,
எரி கனன்று ஆனாக் குடாரி கொண்டு அவன் உருவு
திரித்திட்டோ ன், இவ் உலகு ஏழும் மருள;
கருப் பெற்றுக் கொண்டோ ர், கழிந்த சேய் யாக்கை
நொசிப்பின், ஏழ் உறு முனிவர், நனி உணர்ந்து,
வசித்ததைக் கண்டம் ஆக மாதவர்,

"மனைவியர், நிறைவயின், வசி தடி சமைப்பின்,
சாலார்; தானே தரிக்க" என, அவர் அவி
உடன் பெய்தோரே, அழல் வேட்டு; அவ் அவித்
தடவு நிமிர் முத் தீப் பேணிய மன் எச்சில்,
வடவயின், விளங்கு ஆல், உறை எழு மகளிருள்
கடவுள் ஒரு மீன் சாலினி ஒழிய,
அறுவர் மற்றையோரும் அந் நிலை அயின்றனர்;
மறு அறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற் சூலினரே;
நிவந்து ஓங்கு இமயத்து நீலப் பைஞ் சுனைப்
பயந்தோர் என்ப, பதுமத்து பாயல்;
பெரும் பெயர் முருக! நிற் பயந்த ஞான்றே,
அரிது அமர் சிறப்பின் அமரர்செல்வன்,
எரி உமிழ் வச்சிரம் கொண்டு, இகந்து வந்து, எறிந்தென,
அறு வேறு துணியும்அறுவர் ஆகி,
ஒருவனை; வாழி, ஓங்கு விறல் சேஎய்!
ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய
போரால் வறுங் கைக்குப் புரந்தரன் உடைய,
அல்லல் இல் அனலன் தன் மெய்யின் பிரித்து,
செல்வ வாரணம் கொடுத்தோன்; வானத்து
வளம் கெழு செல்வன் தன் மெய்யின் பிரித்து,
திகழ் பொறிப் பீலி அணி மயில் கொடுத்தோன்;
திருந்து கோல் ஞமன் தன் மெய்யின் பிரிவித்து,
இருங் கண் வெள் யாட்டு எழின் மறி கொடுத்தோன்;
ஆஅங்கு அவரும் பிறரும் அமர்ந்து படை அளித்த

மறியும், மஞ்ஞையும், வாரணச் சேவலும்,
பொறி வரிச் சாபமும், மரனும், வாளும்,
செறி இலை ஈட்டியும், குடாரியும், கணிச்சியும்,
தெறு கதிர்க் கனலியும், மாலையும், மணியும்,
வேறு வேறு உருவின் இவ் ஆறு இரு கைக் கொண்டு,
மறு இல் துறக்கத்து அமரர்செல்வன்தன்
பொறி வரிக் கொட்டையொடு புகழ் வரம்பு இகந்தோய்.
நின் குணம் எதிர்கொண்டோ ர் அறம் கொண்டோ ர் அல்லதை,
மன் குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை
செறு தீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்,
சேரா அறத்துச் சீர் இலோரும்,
அழி தவப் படிவத்து அயரியோரும்,
மறு பிறப்பு இல் எனும் மடவோரும், சேரார்
நின் நிழல்; அன்னோர் அல்லது இன்னோர்
சேர்வார் ஆதலின், யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும், அன்பும், அறனும், மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!

# பத்துப்பாட்டு

## நெடுநல்வாடை

### கோவலர் வாடையால் துன்புறுதல்

**வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,**
**பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென,**
**ஆர்கலி முனைஇய கொடுங் கோல் கோவலர்**
**ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி,**
**புலம் பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்**
**நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,**
**மெய்க் கொள் பெரும் பனி நலிய, பலருடன்**
**கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க**

### கூதிர்க் கால நிலை

**மா மேயல் மறப்ப, மந்தி கூர,**
**பறவை படிவன வீழ, கறவை**
**கன்று கோள் ஒழியக் கடிய வீசி,**
**குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்**

### ஊரினது செழிப்பு

**புன் கொடி முசுண்டைப் பொறிப் புற வான் பூ,**
**பொன் போல் பீரமொடு, புதல்புதல் மலர;**
**பைங் காற் கொக்கின் மென் பறைத் தொழுதி,**

**இருங் களி பரந்த ஈர வெண் மணல்,**
**செவ் வரி நாரையொடு, எவ் வாயும் கவர**

**கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்ப்**
**பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண் மழை**
**அகல் இரு விசும்பில் துவலை கற்ப;**

**அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த**
**வண் தோட்டு நெல்லின் வரு கதிர் வணங்க;**
**முழு முதல் கமுகின் மணி உறழ் எருத்தின்**
**கொழு மடல் அவிழ்ந்த குழூஉக் கொள் பெருங் குலை,**
**நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு,**

**தெண் நீர்ப் பசுங் காய், சேறு கொள முற்ற;**
**நளி கொள் சிமைய, விரவு மலர், வியன் காக்**
**குளிர் கொள் சினைய குரூஉத் துளி தூங்க**

**முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்**

**மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்,**
**ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்,**

**படலைக் கண்ணி, பரு ஏர் எறுழ்த் திணி தோள்,**
**முடலை யாக்கை, முழு வலி மாக்கள்**
**வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,**
**துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து,**
**இரு கோட்டு அறுவையர், வேண்டு வயின் திரிதர**

**மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்**

**வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்,**
**மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்,**
**பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக் கண்,**
**மடவரல் மகளிர் பிடகைப் பெய்த**
**செவ்வி அரும்பின், பைங் கால் பித்திகத்து,**

அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந் திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர

### கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்

மனை உறை புறவின் செங் கால் சேவல்

இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,
இரவும் பகலும் மயங்கி, கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப;
கடியுடை வியல் நகர்ச் சிறு குறுந் தொழுவர்,
கொள் உறழ் நறுங் கல், பல கூட்டு மறுக;

வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப;
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில் மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,

இருங் காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப,
கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங் கேழ் வட்டம் சுருக்கி; கொடுந் தறி,
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,
வேனில் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை, திரியாது, திண் நிலைப்
போர் வாய் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகு வாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,

பகுவாய்த் தடவில் செந் நெருப்பு ஆர;

ஆடல் மகளிர் பாடல் கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன் குரல் தீம் தொடை,
கொம்மை வரு முலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப;

காதலர்ப் பிரிந்தோர் புலம்ப; பெயல் கனைந்து,
கூதிர் நின்றன்றால்

### அரண்மனை அமைப்பு - மனை வகுத்த முறை

போதே, மாதிரம்
விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்,
இரு கோல் குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு,
ஒரு திறம் சாரா அரை நாள் அமயத்து,

நூல் அறி புலவர் நுண்ணீதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை வகுத்து-

### கோபுர வாயில்

ஒருங்கு உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின்,
பரு இரும்பு பிணித்து, செவ்வர்க்கு உரீஇ,

துணை மாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு,
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து,
போது அவிழ் குவளைப் புதுப் பிடி கால் அமைத்து
தாழொடு குயின்ற, போர் அமை புணர்ப்பின்,
கை வல் கம்மியன் முடுக்கலின், புரை தீர்ந்து,

ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை,
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,

குன்று குயின்றன்ன, ஓங்கு நிலை வாயில்,

### முற்றமும் முன்வாயிலும்

திரு நிலை பெற்ற தீது தீர் சிறப்பின்,
தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,

நெடு மயிர் எகினத் தூ நிற ஏற்றை
குறுங்கால் அன்னமோடு உகளும் முன் கடை,

### அரண்மனையில் எழும் ஓசைகள்

பணி நிலை முனைஇய பல் உளைப் புரவி
புல் உணாத் தெவிட்டும் புலம்பு விடு குரலொடு,
நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து,

கிம்புரிப் பகு வாய் அம்பணம் நிறைய,
கவிழ்ந்து வீழ் அருவிப் பாடு விறந்து, அயல
ஒலி நெடும் பீலி ஒல்க, மெல் இயல்
கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை,
நளி மலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்

### அந்தப்புரத்தின் அமைப்பு

யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து,
பரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி,
அறு அறு காலைதோறு, அமைவரப் பண்ணி,
பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க;

பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது,
ஆடவர் குறுகா அருங் கடி வரைப்பின்,

**வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு**
**வில் கிடந்தன்ன கொடிய, பல் வயின்,**
**வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,**

**மணி கண்டன்ன மாத் திரள் திண் காழ்,**
**செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ் சுவர்,**
**உருவப் பல் பூ ஒரு கொடி வளைஇ,**
**கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்**

## அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்

**தச நான்கு எய்திய பணை மருள் நோன் தாள்,**

**இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரி நுதல்,**
**பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து,**
**சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்**
**கூர் உளிக் குயின்ற, ஈர் இலை இடை இடுபு,**
**தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்**

**புடை திரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,**
**உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து,**
**பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்**

## கட்டிலின்மேல் அமைந்த படுக்கை

**மடை மாண் நுண் இழை பொலிய, தொடை மாண்டு,**
**முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,**

**புலிப் பொறிக் கொண்ட பூங் கேழ்த் தட்டத்துத்**
**தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,**
**ஊட்டுறு பல் மயிர் விரைஇ, வய மான்**
**வேட்டம் பொறித்து, வியன் கண் கானத்து**

முல்லைப் பல் போது உறழ, பூ நிரைத்து,

மெல்லிதின் விரிந்த சேக்கை

### படுக்கையின்மேல் அரசி மலரணையில் வீற்றிருத்தல்

மேம்பட,
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூ மடி விரித்த சேக்கை,

ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடு வீழ் தாழ, துணை துறந்து,
நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி,
நெடு நீர் வார் குழை களைந்தென, குறுங் கண்
வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்,

பொலந் தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து,
வாளைப் பகு வாய் கடுப்ப வணக்குறுத்து,
செவ் விரல் கொளீஇய செங் கேழ் விளக்கத்து,
பூந் துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்,

அம் மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு,
புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்

### சேடியரும் செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்

தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்,
அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ் முலை,
வம்வு விசித்து யாத்த, வாங்கு சாய் நுசுப்பின்,

மெல் இயல் மகளிர்-நல் அடி வருட;

நரை விராவுற்ற நறு மென் கூந்தல்
செம் முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரை பல் பயிற்றி,
இன்னே வருகுவர் இன் துணையோர் என,
உகத்தவை மொழியவும்

**தலைவியின் வருத்த மிகுதி**

ஒல்லாள், மிகக் கலுழ்ந்து
நுண் சேறு வழித்த நோன் நிலைத் திரள் கால்,
ஊறா வறு முலை கொளீஇய, கால் திருத்தி,
புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப் பனி,
செவ் விரல் கடைக் கண் சேர்த்தி, சில தெறியா,
புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு
இன்னா அரும் படர் தீர, விறல் தந்து,
இன்னே முடிகதில் அம்ம

**பாசறையில் அரசன் நிலை**

மின் அவிர்
ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை
நீள் திரள் தடக் கை நிலமிசைப் புரள,

களிறு களம் படுத்த பெருஞ் செய் ஆடவர்,
ஒளிறு வாள் விழுப் புண் காணிய, புறம் போந்து,
வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி,
தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல்
பாண்டில் விளக்கில், பரூஉச் சுடர் அழல,

வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு

**முன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்,**
**மணி புறத்து இட்ட மாத் தாள் பிடியொடு**
**பருமம் களையாப் பாய் பரிக் கலி மா**
**இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,**

**புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ,**
**வாள் தோள் கோத்த வன்கண் காளை**
**சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,**
**நூல் கால்யாத்த மாலை வெண் குடை**
**தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,**

**நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,**
**சிலரொடு திரிதரும் வேந்தன்,**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.**

**தனிப் பாடல்**

**வாடை நலிய, வடிக் கண்ணாள் தோள் நசைஇ,**
**ஓடை மழ களிற்றான் உள்ளான்கொல்- கோடல்**
**முகையோடு அலமர, முற்று எரி போல் பொங்கி,**
**பகையோடு பாசறை உளான்?**

**BHARATHIAR UNIVERSITY:: COIMBATORE-641 02**
**BOARD OF STUDIES IN TAMIL (UG) - PART-1 TAMIL**

**2025-2027**

| | | | |
|---|---|---|---|
| 1 | Dr.R.P.Kannaki- Chairperson<br>Associate Professor& Head<br>Deaprtment of Tamil<br>Tiruppur Kumaran College for Women<br>SR NagarManglam Road<br>Tirupur-641687<br>MOBILE NUMBER 9443728260 | 7 | 8 Mr.M.Velayutham-Member<br>Industrialist<br>No 20, Raja Street Town Hall (Near Clock Tower. Opposite Olympic Cards)<br>Coimbatore-641001 |
| 2 | Dr.G Suresh-Member<br>Associate Professor of Tamil & Head<br>VLB Janakianmal College of Arts and Science<br>Kovaipudur 641042 | 8 | Mrs K Murugeswari-Member<br>Stu. Alumnus<br>DO. Karuppusamy<br>39/88. Kommaran Street Kumaraligam Post<br>Madathukulam (TK)<br>Tirupur Dit |
| 3 | Dr.T Sukumaran-Member<br>Associate Professor of Tamil Govt Arts and Science College<br>Thalavadi- 638461 | 9 | 10 Dr. A Senthamarai-Member-ACTA<br>Assistant Professor of Tamil & Head<br>Erode Arts and Science College<br>Erode- 63800 |
| 4 | Mrs. N Karunmambiga Member<br>Assistant Professor of Tamil<br>United College of Arts & Science<br>Periyanackenpalasam<br>Combatore 641020 | 10 | Dr.R Gokul Member- AUT<br>Associate Proffesor of Tamil<br>SRMV College of Art and Science<br>Coimbatore-641020 |
| 5 | Dr. Thyagarajan- Member- Other- Univ<br>Professor of Tamil& Head<br>Department of Scientific Tamil&Tamil<br>TamIl University Thanjavur-613010 | 11 | Dr Kumarasamy Ex-CP \Spl.Invitee<br>Associate Professor of Tamil<br>Government Arts College<br>Kangayam-638108 |
| 6 | Dr.Umamakheswari-Member-Other -State<br>Assistant Professor Of Tamil<br>Research Centre,Government college<br>Chittur | | |

| | | | |
|---|---|---|---|
| | **Pallakad-678104** | | |